விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை 08 புதன்கிழமை (22.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 34

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## அரசு மீது நம்பிக்கையீனம்

# அமைச்சர் மகேஸ்வரன் எதிர்க் கட்சியில் இணைவார்!

## பி.பி.ஸிக்கு அவரே பேட்டி

(நமது நிருபர்)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஒரு வருடகால ஆட்சி நம்பிக்கை இழந்த நிலையில் தமிழ்பேசும் மக்களின் குறைகளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறுவதற்கு அரசில் இருந்தவாறு எதிர்க் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகி வருவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஜனாதிபதி மாளிகையில் கொண்டாடிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் மகேஸ்வரன், எதிர்க் கட்சித் தலைவர் மகிந்தராஜ பக்ஷ தலைமையில் எதிரணிப் பாராளுமன்ற அங்கத்தவர்களை கூட்டி வந்து யாழ்.நிலைமையை நேரில் காட்டிய பின் நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு அரசின் மீதான தனது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அப் பேட்டியில் அமைச்சர் தி.மகேஸ்வரன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

### தமிழ் மக்களின் பிரச்சினையைக் கூறினேன்

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்ட போது தமிழ் மக்களின் பிரச்சினைகளான அதிஉயர் பாதுகாப்பு,வலய மீள் குடியேற்றம், இராணுவக் கெடுபிடிகள், சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, கைதிகளுக்கான பொதுமன்னிப்பு

(10ம்பக்கம் பார்க்க)



அமைச்சர் தி.மகேஸ்வரனும், நல்லை ஆதீன குருமுதல்வரும் ஆதீனத்தில் நேற்று கலந்துரையாடியபோது...

## ஜனாதிபதியுடன் நேற்று பிரதமர் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நண்பகல் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அதன் நகர்வுகள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் குறித்து பிரதமர் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினார்.

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பில் பிரதமருடன் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, நிதிஅமைச்சர் கே.என்.சொக்ஷி, நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோரும் பங்குபற்றினர்.

இதேவேளை ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பால பெத்தபெண்டி ஆகியோரும் இச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் உடன் இருந்தனர்.

சமாதான நடவடிக்கைகளில் அடுத்த கட்டங்களில் மேற்கொள்ளவுள்ள நகர்வுகள், அதிஉயர் பாது

(10ம்பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள மனிதாபிமான புனரமைப்புப் பணிகளில் டெனிஸ் அகதிகள் பேரவை கலந்து கொள்வது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை டெனிஸ் அகதிகள் பேரவைப் பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(10ம்பக்கம் பார்க்க)

## வன்னிக் கல்வி நிலைமையை ஆராய உலகவங்கிக் குழு வருகை

(வவுனியா)

வன்னிப் பிரதேசப் பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக வன்னிப் பிரதேச கல்வித்திணைக்கள உயரதிகாரிகளுடன் ஆராய்வதற்கு உலக வங்கிக்குழுவினர் இன்று வவுனியாவுக்கு வருகைதரவுள்ளனர்.

இன்று வருகைதரவுள்ள உலக வங்கிக்குழுவினர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் பற்றியும், ஆசிரியர் மற்றும் பாடசாலைகளின் பௌதிகவளங்களின் பற்றாக்குறை தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி கல்விப் பணிப்பாளரையும், அதிகாரிகளையும் இக் குழுவினர் இன்று

(10ம்பக்கம் பார்க்க)

### தமிழகத்திலிருந்து தாயகம்வர

## இரவோடு இரவாக வெளியேறும் இலங்கைத் தமிழ் அகதிகள்

(சென்னை)

தமிழக அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள், தமிழக பொலிஸாரின் கண்களில் சிக்காமல் இரவு வேளைகளில் அகதி முகாம்களில் இருந்து வெளியேறி, இராமேஸ்வரம் கடல் ஊடாக தாயகம் திரும்புவதற்கு முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை மீளவும் இலங்கைக்கு வரவழைப்பதென அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முடிவு செய்துள்ளன.

இந்த நிலையில் தாயகம் திரும்புவதற்கு விரும்பும் அகதிகள் அனுமதிப் பத்திரம் பெறுதல்

(10ம்பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வு புனரமைப்பு உபகுழு பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மீள்குடியமர்வு புனரமைப்பு உப குழுவின் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக ஏழு பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

சூ.சிறில் தலைவர் பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். மாவட்டம்; ப.கனகலிங்கம் பொதுச் செயலாளர், பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்.மாவட்டம் காப்பாளர் தீவக மக்கள் நலன் காப்பகம்;

சீ.பொன்னம்பலம் - தலைவர், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு, அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம்; க.பரமநாதன் தலைவர்

(10ம்பக்கம் பார்க்க)

### ஆதீன முதல்வருடன் அமைச்சர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று மாலை நல்லை ஆதீனத்திற்கு சென்று ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுடன் கலந்துரையாடினார்.

(10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட

ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

# பெற்றோர், ஆசிரியர் இணைந்த செயற்பாடே மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்குகந்தது

எந்தவொரு முன்னேற்றத்திற்கும் அடிப்படையான முன்னேற்றம் கல்வி முன்னேற்றமே.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்ற வள்ளுவன் வாக்கின் மூலம் கல்வியின் மேன்மையினை நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

இன்றைய வாழ்க்கைப் போக்கில் ஒருவர் மற்றவரைச் சாராமல் வாழ்வதென்பது மிக கடினமும் இயலாததுமாகும். அதே போல் ஒரு நாடு மற்றொரு நாட்டினைச் சாராமல் வளர்ச்சியடைய இயலாது. மற்றவர்களின் உதவிகள், வழிகாட்டுதல், அறிவுரைகள் தேவைப் படுகின்றன. வளமான வாழ்க்கைக்கு இவை இன்றியமையாதவையாகும். வழிகாட்டுதல் என்பது பாதையைக் காட்டுதல், ஒன்றைக் குறிப்பிடுதல் அல்லது சுட்டிக்காட்டுதல் என்று பொருள்படும். இராவேளைகளில் கடலில் பயணிக்கையில் வான் துருவ நட்சத்திரம் வழிகாட்டியாக (Guide) காலம் காலமாக இருந்து வருகின்றது. இது இயற்கை அன்னை வழங்கிய வரப்பிரசாதமாகும். வாழ்க்கைப் படகில் பயணிக்கவிருக்கும் மாணவச் செல்வங்களிற்கு துருவ நட்சத்திரமாக விளங்க வேண்டியவர்கள் யார்?

## பெற்றோர்கள் கற்பிக்க வேண்டியவை

மாணவர்களின் நலனுக்காக செலுத்தப்படும் எல்லாவிதமான விடயங்களிலும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்து செயல்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும். வீட்டில் கொடுக்கப்படும் போதனைகள் ஆசிரியரிற்கு உதவும் வகையில் அமைய வேண்டும். வீட்டில் ஒழுங்காகவும், சுத்தமாகவும், திருத்தமாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பெற்றோர்கள் கற்பிக்க வேண்டும். ஆசிரியரின் பணி இரண்டாம் தரமானதே. மாணவர்களிடையே நல்ல பண்புகளை உருவாக்குவதில் வீட்டில் கொடுக்கப்படுவதில் செயலாக்கத்தை விட வேறு எவ்விதமான செல்வாக்கும் அவ்வளவு பெரும் பங்கு ஏற்பதில்லை. என்னதான் ஒழுக்கம் தொடர்பாக பாடசாலைகளில் போதிக்கப்பட்ட போதும் இந்தப் படிப்பினைகள் வீட்டில் மதிக்கப்படாது போயின் பயன் என்ன?

குழந்தைகள் எப்போது பாடசாலையினுள் காலடி எடுத்து வைத்தார்களோ அன்றிலிருந்து ஆசிரியர் பெற்றோர்களுடன் இணைந்து உடனுழைக்க வேண்டும். பள்ளிக் காலத்தில் பள்ளிப் பாடங்களின் ஒரு பகுதியாக உடலுழைப்பும், தொழில கல்வியும் இணைக்கப்படல் வேண்டும். பள்ளியில் தொழில் சார்ந்த பாடங்களிற்கும்,உடற்கல்வி தொடர்பான உடல் உழைப்புடன் தொடர்பான பாடங்களிற்கும் மாணவர்களும்,பெற்றோர்களும் பொதுவாக எதிர்ப்பு தெரிவிப்பதுண்டு. ஒரு தொழிலைக்கற்பது போன்ற பயனுள்ள வேலைகள் மதிப்பைக் குறைப்பவை என்று அவர்கள் நினைக்கின்றனர். விளையாட்டுத் துறையில பங்கு கொள்வது பரீட்சைகளைக் குழப்புகின்றன எனக் கருதுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் வாழ்வின் உண்மையான உயர்வைக் குறித்து தவறான கருத்துள்ளவர்களே.

பெற்றோர்கள் தங்கள் பங்கை உண்மையாக செய்வார்களானால் ஆசிரியரின் பணி பெருமளவு இலகுவாகும். விழிப்புடன் உள்ள ஆசிரியர் தன் மாணவர்களைப் பயனுள்ள பணியில் ஈடுபடுத்த பல்வேறு வாய்ப்புக்களைக் கண்டடைய முடியும். சிறுபிள்ளைகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் ஆசிரியர்கள் மட்டில் பெருமளவு தன்னம்பிக்கையும்,மரியாதையும் கொண்டுள்ளனர். வீட்டில் உதவிசெய்தல், ஏழைகளுக்கு உதவுதல், நோயுற்றவர்களுக்கு நற்பணி செய்தல் போன்ற எதை ஆசிரியர் குறிப்பிட்டாலும் அது பலன் தராமல் போகாது. எனினும் பெற்றோர்கள் நன்றியறிதலுடன் இணைந்து செயலாற்றத் தவறும் பட்சத்தில் ஆக்கபூர்வமான மாற்றம் எதனையும் எதிர்பார்க்க இயலாது போய்விடும்.

## ஞானமுள்ள ஆலோசகர்கள்

இறைவனின் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு ஒழுகி வாழ வேண்டும் என்ற தமது கடமையைப் பெற்றோர்கள் முற்றிலும் புரிந்து கொண்டார்களேயானால் அவர்கள் பாடசாலைகளிலும், கல்வி பற்றிய கோட்பாடுகளிலும் ஞானமுள்ள ஆலோசகர்களாக இருப்பார்கள்.பிள்ளைகளின் நடத்தை பற்றியும் அவர்களின் உடல்ரீதியான சிறப்பியல்பு அல்லது பலவீனங்களைப் பற்றியும் ,பெற்றோர்களின் நெருக்கமான பின்னணிகளும் ஆசிரியருக்கு தெரியவருவது அவருக்கு உதவியாகவே இருக்கும். பெற்றோர்கள் வீட்டுக் கல்வியில் ஆர்வம் காட்டும் போது இரட்டைப் பயன் கிடைக்க வழி செய்கிறார்கள். பல பெற்றோர் வேலை மற்றும் பிற கவலைகளால் தங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வினை மேம்படுத்தும் வாய்ப்புக்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள். இவ்வாறான பெற்றோர்களை விழிப்படையச் செய்ய ஆசிரியர்களால் முடியும். பெற்றோர் ஆசிரியர்களுடன் இணைந்து செயல்படுவதோடு அது தங்கள் கடமை என்பதை உணர வேண்டும்.

## ஆசிரியர்கள் நிலை

சில ஆசிரியர்கள் பாடத்திட்டம் பூர்த்தியாக்குவதே தங்கள் கடமை என்று நினைக்கின்றார்கள். கீழ்ப்படிதலை செயல்படுத்த வேண்டும் என்று நினைப்பதில்லை. மாணவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டியது அவசியம் தான். இருந்தும் மாணவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள கொள்கை களை மதிக்காவிட்டால் அப்படிப்பட்ட கல்வியினால் பிள்ளைகளிற்கு என்ன பயன் தனக்கு அதிகாரம் செய்ய உரிமை உள்ளது என்பதை ஆசிரியர் உணர்வ தில்லை.

ஆசிரியர் தனது வேலைச் சுமையை தனியொருவராகத் தூக்கிச் செல்லும் படி விடலாகாது. அவரிற்கு ஒவ்வொரு பெற்றோரிடம் இருந்தும் இரக்கம், கனிவு, ஒத்துழைப்பு, அன்பு ஆகியவை தேவை. பெற்றோர்கள் ஆசிரியரின் முயற்சிகளை பாராட்டு தலைக் காண்பிப்பதன் மூலம் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் தவறான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் எதையும் சொல்லவோ செய்யவோ கூடாது.

இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்களில் பலர் ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பதில்லை.அவர்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற நல்ல போதனைகளை வீட்டில் பேணிக்காப்பதில்லை. பாடசாலைகளில் கற்பிக்கப்படும் நல்ல போதனைகளை வீட்டில் மேலும் அதிகமாக வற்புறுத்தி செயல்படுத்துவதற்கு மாறாக அவர்கள் தங்கள் பிள்ளைகளை மனம் போனபடி விட்டு விடுகிறார்கள். கட்டுப்பாடே கிடையாது. ஆசிரியர் கீழ்ப்படிதலை வலியுறுத்தும் போது, மாணவர் தங்கள் பெற்றோரிடம் ஒன்றுக்கு இரண்டாகப் பெருக்கிச் சொல்லி, தாங்கள் மோசமாக நடத்தப்படுவதாக குற்றம் சுமத்துகிறார்கள். ஆசிரியர் மிகக் கஷ்டப்பட்டுப் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முயன்றாலும் கூட, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தவறே செய்திருந்தாலும் கூட பரிந்து பேச வந்து விடுவார்கள். வீட்டில் ஒழுங்காக இல்லையெனப் பிள்ளைகளைக் கோபித்துக்கொள்ளும் பெற்றோர்கள் கூட பாடசாலையில் ஒழுங்கும், கட்டுப்பாடும் விதிக்கப்பட்டு அது நடை முறைப்படுத்தப்படும் போது மிக அறிவீனமாகத் தான் நடந்து கொள்கிறார்கள். இவ்வாறு பரிந்து வரும் பெற்றோர்கள் எமது பிரதேச மாணவர்களிடம் தற்போது பயங்கரமான அளவில் விரிவடைந்து காணப்படுகின்ற ஒழுங்கீனத்தை மேலும் பெருக்கவே செய்கிறார்கள் என்பதை அறிவதே இல்லை.இன்றைய மாணவர்களைச் சுற்றியுள்ள ஒவ்வொரு தூண்டுதல்களும் சரியானதாகவும் மாணவரை நன்நெறிப்படுத்துவனவா கும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

## பாராட்டுதல் நன்று

பெற்றோர்கள் ஆசிரியரின் பணியைக் குறித்து விமர்சிப்பதற்குப் பதிலாக அதைப் பாராட்டிப் பேசுவது சிறந்தது. ஆசிரியரின் பணியைக் குறித்து விமர்சிக்கவோ அல்லது சில கருத்துக்களை அவரிடம் கூறவோ வேண்டுமெனில், அவற்றை அவரிடம் தனிமையில் எடுத்துரைக்கலாம் இதனால் பயனேதும் இல்லை எனக்கருதினால் பள்ளி நிர்வாகத்திடம் இது பற்றித் தெரிவிக்கலாம். ஆசிரியரைப் பிள்ளைகள் முன்னே ஒரு போதும் விமர்சிக்காதீர்கள். பிள்ளைகளின் நலன் யாரிடம் பெருமளவு சார்ந்துள்ளதோ அவர்கள் மீது பிள்ளைகள் வைத்துள்ள மரியாதைக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் எதையும் சொல்லக் கூடாது.

பெற்றோர்கள் தங்களை ஆசிரியரின் நிலையில் வைத்து ஒரு கணம் நோக்குவார்களானால் , ஒவ்வொரு வகுப்பிலும் பல வகையான மனநிலையில் பல்வேறு பாதிப்புக்களும், பல்வேறு பார்வைகளும் செலுத்துகின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களை உடைய ஒரு பாடசாலையை நிர்வகிப்பதும், அங்கே ஒழுக்கத்தைப் பேணி வளர்ப்பதும் எவ்வளவு கடினமான பணி என்பதை உணர்வார்கள்.

டோமினிக் ஷெல்ரன்
ஆசிரியர்
யா/ சென். ஜேமஸ் ம.வி

## அம்பாறையில் அதிகபாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் பெரும் மழை பெய்து வருகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் முதல் பெய்து வரும் மழை காரணமாக இம்மாவட்டமே அதிகமான பாதிப்புக் குள்ளாகியுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக 69ஆயிரத்து 304 குடும்பங்கள் பாதிக்கப் பட்டதுடன், 5 ஆயிரத்து 363 குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்திணைக்களத்தின் கீழ், வேலணையில் இயங்கவிருக்கும் புதிய ஆசிரியர் மத்திய நிலையத்திற்கு முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தீவக வலயக்கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

இந்த மத்திய நிலையத்தில் முகாமையாளராக ஒருவர் காப்புக் கடமை அடிப்படையில் சேவை செய்வதற்கு நியமிக்கப்படவுள்ளார்.

விண்ணப்பதாரி ஆசிரியர் சேவையில் உள்ளவராக இருக்க வேண்டும். (உ)

## டாக்டரின் மனைவி குத்திக் கொலை

(நானுஓயா)

டி.வி பார்த்துக் கொண்டிருக்கையில் டாக்டர் ஒருவரின் மனைவி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

பொலிஸ் மோப்ப நாயின் உதவியோடு ஒரு நபரை அட்டன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். அட்டன் பகுதி தோட்டமொன்றில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. (பி)

## இணைந்த நூலகப் பொறுப்பாளர் சேவை

(கொழும்பு)

அரசாங்க வாசிகசாலைகளில் கடமையாற்றும் நூலகர்களின் நன்மை கருதி இணைந்த நூலகப் பொறுப்பாளர் சேவையை ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இணைந்த சேவையில் உள்ளீர்க்கபடுவதற்கு தகைமை பெற்றுள்ள சகல நூலகர்களும் தமது விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க நிருவாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-8)





நேற்று முன்தினம் யாழ். வந்த எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மற்றும் அவருடன் வந்த எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நயினாதீவு நாகவிகாரைக்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பதவிகளை வழங்கிய போதிலும் அடிக்கடி அவர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்பது பற்றி விசாரணை செய்யப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரதமநீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளனர்.

இதற்கமைய மேமாதம் பத்தொன்பதாம் திகதி விடயம் சம்பந்தமான ஆய்வும் விசாரணையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

பதவி உயர்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் ஒவ்வொருவரும் பெற்ற புள்ளி விபரங்களைக் கொண்ட விரிவான அறிக்கை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-8)

## இரு தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

வீடமைப்பு, நிர்மாணத்துறை அதிகாரசபையின் தலைவியாக பணியாற்றிய என்.கல்யாணரத்தினம் கட்டடப்பொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவியாகவும்,

கட்டடப்பொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றிய சரத்முனசிங்க வீடமைப்பு நிர்மாணத்துறை அதிகாரசபையின் தலைவராகவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானால் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3)

## பிரமுக வங்கி வைப்புகளை வேறு வங்கிகளுக்கு மாற்றுக!

### அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

பிரமுக வங்கியில் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களை வேறு வங்கிகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூர் வர்த்தகர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இது குறித்து தாம் மத்திய வங்கியிடம் முறைப்பாடு செய்த போது இவ்வாறு வேறு வங்கிக்கு மாற்றப் போதிய சட்ட திட்டங்கள் தமக்கு இல்லை என மத்திய வங்கி கூறிவிட்டதாக பிரமுகவங்கியில் பணவைப்புச் செய்த பிரபல தனியார் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரமுக வங்கியில் பணத்தை வைப்புச் செய்த பல தனியார், மற்றும் அரச நிறுவனங்களின் பணத்தை மீளளிக்க முடியாத நிலையில் மேற்படி வங்கியின் முகாமையாளர் தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## மீளக் குடியமர்ந்தோர்க்கு மலசலகூட வசதியில்லை

(சுதுமலை)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுழிபுரம் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 50 குடும்பங்களுக்கு யுனிசெவ் உதவியுடன் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள பெரும்பாலான வீடுகள் மலசல் கூட வசதியற்று, தொற்று நொய் பரவும் அபாயம் நிலவியமை குறித்து சம்பந்தப்பட்ட சுகாதாரப் பரிசோதகர் வலிமேற்கு பிரதேசசெயலரிற்கு சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப் பட்டது.

எனினும் இப்பகுதியில் இன்னமும் பல குடும்பங்கள் மலசல கூட வசதியின்றி வாழ்ந்து வருகின்றன.

வன்னிப்பகுதியில் இருந்து அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களே இவ்விதம் வாழ்ந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. (உ-252)

## மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால்

# உரிமைகளை வென்றெடுக்க ஆயுதம் ஏந்திப் போராடுவோம்

## மட்டு. அபிவிருத்திக் குழு பிரதமருக்கு மகஜர்

(மட்டக்களப்பு)

**இப்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு மீண்டுமொரு யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் ஆகிய நாம் அனைவரும் ஆயுதம் ஏந்திப் போராடி எமது உரிமைகளை வென்றெடுக்க ஆயத்தமாக உள்ளோம்.ா**

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கோட்டமனை அபிவிருத்திக் குழுவினால் 15 ஆயிரம் பேரின் கையொப்பத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜர் நேற்று முன்தினம் மாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் செயலாளர் அகியோர் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தனர்.

பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மேற்படி மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு எந்தவித இடையூறுகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானமும் மலர அவர்களின் உரிமைகளை வழங்கி நியாயமான வகையில் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆதற்கான அனைத்து ஆதரவுகளையும் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்கள் தருவதற்கு தயாராக உள்ளனர்.

பிரித்தானியர் ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசுகள் தமிழினத்தை அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்தி ஆள்வதிலேயே அக்கறையாக இருந்தன.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை நியாமான வழிகளிலும் அகிம்சை வழிகளிலும் கோரியபோதெல்லாம் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

இதன் காரணமாகவே தமிழ் மக்கள் அனைவரும் தமது உரிமைகளை வென்றெடுக்க ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை ஏற்பட்டது.

இந்த ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி கடந்த இரு தசாப்தங்களில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன், அவர்களின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டதுடன், தமது சொந்த இடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான் ஆகியோருக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-8)

## சமாதான நிலைக்கேற்ப தம்மை மாற்றியமைப்பதில் புலிகள் மிகுந்த ஆர்வம்

### கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்ற போதிலும், தமது முன்னைய செயற்பாடுகளையும் நிலைப்பாடுகளையும் மாற்றி அமைப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர் என்பது தெளிவாக விளங்குகிறது.

இவ்வாறு இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண் பியூறு ஹொவ்டே நேற்று முன்தினம். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியின்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஹொவ்டே,

இவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைத்துவம் குறிப்பாக தமிழ்ச் செல்வன் அதிகஅக்கறை காட்டி வருகின்றார்.

இவர்களின் செயற்பாடுகளை சீராக்கிக் கொள்வது தொடர்பாக பல தடவைகள் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

இதனை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் சில முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சீர்திருத்தம் இப்போது ஆமை வேகத்திலேயே நடைபெற்று வருகிறது.

இதனைத் துரிதப்படுத்த இலங்கைப் போர நிறுத்தக் கணகாணிப்புக் குழுவும், விடுதலைப் புலிகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, இந்நடவடிக்கைகள் தொடர்பாகவும், யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவது தொடர்பாகவும் ரொண்ட் பியூறு ஹொவ்டே விரைவில் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்து பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மகனை அடித்து கொடுமைப்படுத்திய தந்தைக்கு மறியல்

(களுத்துறை)

தனது ஒன்பது வயது மகனை அடித்துத் துன்புறுத்தி வந்த தகப்பன் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஹொரணை வைத்தியசாலையில் இந்த 9 வயதுச் சிறுவன் அனுமதிக்கப் பட்டதையடுத்து, அவர் தந்தையால் அடித்து துன்புறுத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.

தனது தந்தை தன்னை அடித்தும்,கொடுமைப்படுத்தியும் காயமடையச் செய்ததாகப் பையன் பொலிஸாரிடம் கூறினான்.

பையன் இரவில் நித்திரையில் இருந்தபோது அவனது தந்தை குடிபோதையில் வந்து அவனை எழுப்பி அடித்ததாகவும் உத்திரத்தில் தொங்க விடமுயன்றதாகவும் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பையனின் தந்தையான ஏ.ஏ றஞ்சித் அபயசிங்க என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (பி)

## செயற்றிறன் மதிப்பீடு நிகழ்ச்சித் திட்டம்

(காரைநகர்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சேவை வினைத்திறனையும், செயற்றினனையும் அதிகரிக்கும் பொருட்டு இவ்வருடம் முதல் செயற்றிறன் மதிப்பீடு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்டுத்தப்பட உள்ளது.

இதற்கான நடைமுறை குறித்த சுற்று நிருபம் அண்மையில் சமுர்த்தி அதிகாரசபையினால் சகல மாவட்ட செயலகங்களிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தவணை அடிப்படையில் நடைமுறைப்படுத்தவிருக்கும் இத்திட்டத்தின் மூலம் செயற்திறன் வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிற்கு பிரதி பலனை உரிமையாக்குதல் மற்றும் செயற்திறன் அற்றோரை இனங்கண்டு அவர்களிற்கு பயிற்சி வழங்கல் மற்றும் உத்தியோகத்தர்களிற்குப் பதவி உயர்வு வழங்கல், சேவையினை நிரந்தரமாக்கல், வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் பெற்றுக் கொடுத்தல், சம்பள உயர்வினை அனுமதித்தல் முதலான அவசியத் தேவைகளுக்காக இம்மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக சகல சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நாளாந்த கடமை முன்னேற்றம் பற்றிய தகவல்களை வைத்திருக்கும் படியும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-246)

## தாமதித்து வந்த பொலிஸ் கோஷ்டி இடமாற்றம

(குளியாப்பிட்டிய)

கொள்ளைச் சம்பவம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை உடனடியாக தகவல் கொடுக்கப்பட்டும் உரிய நேரத்திற்குச் சென்று நடவடிக்கை எடுக்கத் தவறிய பொலிஸ் கோஷ்டி ஒன்று முழுமையாக வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

குளியாப்பிட்டிய அஸ்வதும என்ற இடத்தில் பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை திருடர் கோஷ்டி ஒன்றினால் கொள்ளையடிக்கப்படுவதாக குளியாப்பிட்டிய பொலிசுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. ஆனால் சம்பவம் நடந்து கொள்ளையர் பணத்துடன் தப்பிச் சென்றதன் பின்னரே பொலிஸ் கோஷ்டி அவ்விடத்துக்கு வந்தது. ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜன்ட் மற்றும் நான்கு கன்ஸ்டபிள்கள் அடங்கிய இக் கோஷ்டியை உடனடியாக வடமேல் மாகாண உதவிப் பொலிஸ்மா அதிபர் அசோக்கா ரட்ணவீர இடமாற்றம் செய்தார்.

மூன்று பேர் அடங்கிய கொள்ளையர் கோஷ்டி, வீடொன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து இக்கொள்ளையை நடத்தியுள்ளனர். இவர்களில் ஒருவர் பொலிஸ் சுப்பிரின்டனாக நடித்ததாகவும் கூறப்படுகிறது. (பி)

## இலங்கையில் முதலிட தாய்லாந்து விருப்பம்

(கொழும்பு)

இலங்கையின் விவசாயத்துறை சார்ந்த கைத்தொழிலகளை பாரிய அளவில் முதலீடு செய்ய தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக கைத்தொழில் அமைச்சர் ரோகித்த போகொல்லாகம கூறியுள்ளார்.

தாய்லாந்து நாட்டின் நிதியுதவியுடன் மொனராகலை மாவட்டத்தில் கணனி உதிரிப்பாகங்களை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் இந்நாடு தனது பூரண அனுசரணை வழங்கிவருகின்றது.

அதன் முதல் நடவடிக்கையாக இந்நாடு பலகோடி டொலர்களை முதலீடு செய்து கணனி உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையினை நிறுவ முன்வந்துள்ளது.

இத்தொழிற்சாலையின் மூலம் பல இளைஞர்-யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். (உ-10)

## சமாதான முயற்சிகளை எதிர்த்து பெப்ரவரியில் பொது வேலை நிறுத்தம்

### 100 தொழிற்சங்கங்கள் பங்கேற்கும்

(கொழும்பு)

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் அரசின் சமாதான முயற்சிகளை எதிர்த்து பொது வேலை நிறுத்தம் ஒன்றை செய்வதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பொ.ஐ.மு தலைமையில் ஜே.வி.பியின் பின்னணியில் இது நடைபெறவுள்ளது.

ஒரு பொதுவான கோரிக்கையை முன்வைக்கும் விதத்தில் சகல தொழிற்சங்கங்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதில் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. பெரிய தொழிற்சங்சகங்கள் பொது வேலைநிறுத்தமொன்றிற்கு உடன்பட்டிருக்கின்றன என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் லால் கந்தா இது குறித்து தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கத் தலைவரான லால் கந்தா மேலும் இது பற்றித் தெரிவிக்கையில், திட்டவட்டமான திகதி பற்றி நாம் இன்னும் முடிவு செய்யவில்லை.

எமது தொழிற்சங்க சம்மேளனத்தில் உறுப்பினராக இல்லாத சங்கங்களுடனேயே இப்போது இது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுகின்றன. தேசிய சொத்துக்களையும் பொது மக்களையும் பாதுகாக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டு அமைப்பு ஒன்றின் தலைமையிலேயே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

எதிர்க்கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பனவற்றின் தலைமையில் சுமார் 100 தொழிற்சங்கங்கள் பொது வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளவிருக்கின்றன.

இதேவேளை, ''எம்மை வாழவிடு'' என்ற சுலோகத்துடன், 18 மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பிரசாரக்கூட்டங்களை ஜே.வி.பி நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்திருந்ததும் தமிழர்கள் வாழும் பகுதிகள் இப்பிரசார இயக்கத்தினுள் அடங்கவில்லை' என்பதும் குறிப்பிடத்தக்கது.. (உ)

# ஆயுத பரிசோதகர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## ஈராக் மீண்டும் வாக்குறுதி

(நியூயோர்க்)
ஐக்கிய நாடுகள் ஆயுத சோதனையாளர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாக ஈராக் உறுதி வழங்கியுள்ளது.

இதன் ஒரு அங்கமாகத்தடை செய்யப்பட்ட ஆயுதங்களைக் கண்டு பிடிக்கும் பொருட்டு தமது நாட்டிலேயே விசேடகுழு ஒன்றை நியமித்து வருவதாக ஈராக் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த வாக்குறுதிகளை ஈராக் மீறுமிடத்து உலக நாடுகள் அதற்கு பின் நிற்கக் கூடாது என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையைக்கேட்டுக் கொண்டுள்ளார்.

எனினும் ஈராக் மீது போர் தொடுக்கும் விடயத்தில் அமெரிக்கா அவசரப்படக் கூடாதென பேரவையின் உறுப்புநாடுகளான சீனா, பிரான்ஸ், ஜேர்மனி என்பன வலியுறுத்தியுள்ளன.

அதேவேளை இந்த விடையத்தில் ரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்கப் போவதாக பிரான்ஸ் எச்சரித்துள்ளது. (பி-2)

# கியூபாவில் நடந்துள்ள பொதுத்தேர்தல்

(ஹவானா)
கியூபாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் புரட்சிகரமும் சோஷலிசமும் என்ற கட்சி வெற்றி பெற்றுள்ளதாக கியூபா அரசு அறிவித்துள்து.

உலகின் எந்த நாட்டிலும் இல்லாதவாறு தனி ஒரு கட்சிமட்டும் போட்டியிடும் இந்த் தேர்தலி 80இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்களிப்பு மூலம் தேர்தலில் போட்டியிடும் ஒரேயொரு கட்சியைச் சேர்ந்த 609உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கும் 1119உறுப்பினர்கள் மாகாண சபைகளுக்கும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இங்கு வாக்களிக்கும் மக்களில் தனிநபர் ஒருவர், ஒருவருக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோருக்கோ வாக்களிக்க முடிவதோடு யாருக்குமே வாக்களிக்கமால் இருக்கவும் முடியும்.

இந்தக் கொள்கையினை கியூபாவிலுள்ள சில கருத்து முரண்பாடுடையவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து வருவதுடன் இத்தேர்தல் மோசடியானதொன்றென எதிர்ப்புக்களையும் தெரிவித்து வருகின்றனர். (பி-2)

# ஈராக்குடன் ஐ.நா. பரிசோதகர்கள் கண்டிப்புடன் செயல்படுவாராம்

*பலகேள்விகளுக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை.*

(பக்தாத்)
பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக ஈராக் எதையும் மறைக்காமல் வெளியிடவேண்டும் என்பது, தாம் அவர்களுடன் கண்டிப்பாக நடந்து கொள்ளப்போவதாக ஐ.நாஆயுதப் பரிசோதகனைக் குழுவின் பிரதான உறுப்பினர்களான ஹன்ஸ் பிளிக்ஸ் மற்றும் மொஹமத் எல்பாரடே ஆகிய இருவரும் கூறியுள்ளனர்.

ஈராக் மேலும் அதிகமாக ஐ.நா பரிசோதகர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் இல்லையெனில் அமெரிக்காவின் ராணுவத்தாக்குதலை எதிர் நோக்கவேண்டியிருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

அணு ஆயுத உற்பத்திக்குப் பயன் படக் கூடிய யுரேனியம் 3ஆணிரம் பொதிகள் ஒரு விஞ்ஞானியின் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து ஐ.நா பரிசோதகர்களின் நெருக்குதல் ஈராக் மீது அதிகரித்து வருகின்றது.

உலகின் பல தலைநகரங்களிலும் ஈராக் மீது அமெரிக்கா பிரிட்டன கூட்டுப்படைகள் நடத்தவிருக்கும் தாக்குதல்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்திருக்கும் அதே வேளையில் அமெரிக்க அதிபர் திரு ஜோர்ஜ் டபிள்யு புஷ் அதுபற்றி எதுவித சலனமுமின்றி இருந்து வருகின்றார்.

கடந்த 8வாரங்களாக நடத்தப் பட்டுள்ள சோதனைகளில் இது வரை பேரழிவு ஆயுதங்கள் பற்றிய ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. தயார்நிலையில் எந்த ஒரு ஆயுதத்தையும் நாங்கள் காணவில்ல என்று ஆயுதப்பரிசோதகர்கள் கூறியுள்ளனர் என்றாலும் முக்கிய கேள்விகளுக்கு ஈராக் சரியானபதில் அளிக்கத் தவறும் பட்சத்தில் தாக்குதல் நிச்சயம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக்கில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட யுரேனியம், மற்றும் வெற்று ஏவுகணை டப்பாக்கள் பற்றி ஐ.நா பரிசோதகர்கள் பெரிதாக அக்கறைக்காட்டிக் கொள்ளாவிட்டாலும் ஈராக் அதிக ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் பல இடைவெளிகள் தொடர்பாக தகுந்த விடையளிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர். (பி)


# ஈராக் - அமெரிக்க முறுகலை தவிர்க்க ரஷ்ய உயர்மட்டக்குழு ஈராக் பயணம்

(மொஸ்கோ)
அமெரிக்காவுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான முறுகல் நிலையைத் தவிர்க்கும் வகையில் ஆயுதசோதனைகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ரஷ்யாவின் உயர்மட்டத் தூதுக்குழுவினர் ஈராக் சென்றுள்ளனர்.

இதேவேளை யுத்தம் ஒன்று ஏற்படாது தவிர்க்கும் சாத்தியக் கூறுகள் குறித்து சர்வதேச அணு சக்தி ஆய்வுமைய அதிகாரிகள் நேற்று ரஷ்ய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளனர்.

இந்த விடயத்தில் இராணுவ நகர்வு சிறந்த பதிலாக இருக்காதெனக் கூறும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், ஆயுத சோதனை நட வடிக் கைகளைத் தொடர்வதே மிகவும் நல்லதெனச் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இவரது இக் கருத்துக்கு தற்போதுள்ள நிலையில் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாதிருப்பதாக சர்வதேச அணு சக்தி ஆய்வுமையத்தலைவர் மொகமட் அல்ப்ரோ கூறியுள்ளார். (பி-2)


கலிபோர்னியாவில் நடைபெற்ற கோல்டன் குளோப் அவாட்ஸ் நிகழ்ச்சியில் சிறந்த தொலைக்காட்சி நடிகருக்கு வழங்கிய விருதுடன் நடிகர் டோனிஷால்ஹப்வும், வெளிநாட்டு மொழிப்படத்திற்கான விருது பெற்ற ஸ்பெயின் நாடடுத்திரைப்பட இயக்குநரான பெட்ரோ அல்மோடோவர்னாவும், ஹொலிவூட் வெளிநாட்டுப்பத்திரிகையாளர் சங்கம் வழங்கிய விருதுடன் ஜெனிஹாட் மேன்னையும படதத்தில் காண்கிறீர்கள்.

# எதிரிகளை வீழ்த்தும் வகையில் முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும்

## ஒஸாமா பின்லேடன் அறைகூவல்

(லண்டன்)
உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் தமக்கிடையேயுள்ள முரண்பாடுகளைக் களைந்துவிட்டுத் தமக்கு வெளியேயுள்ள எதிரியை வீழ்த்தும் வகையில் ஐக்கியப்பட வேண்டும் என்று ஒஸாமா பின்லேடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

லண்டனில் வெளியாகும் அரபுப் பத்திரிகையொன்று மேற்குறித்த கோரிக்கை அடங்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரபு மொழியில் எழுதப்பட்ட இந்த அறிக்கை 26பக்கங்களைக் கொண்டுள்ளது.

பின்லேடனின் கையொப்பம் இடப்பட்டிருந்த இந்த அறிக்கையில் முஸ்லிம்கள் எப்போது விழித்தெழப் போகிறார்கள்? என்றும் நண்பர்களையும் எதிரிகளையும் எவ்வாறு இனங்காணப் போகின்றார்களென வும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், தமக்குள் தாமே மோதிக்கொள்ளும் வகையில் அம்புகளை எய்துவரும் முஸ்லிம்கள எப்போது தமது எதிரிகளை நோக்கி அம்பெய்யப்போகிறார்களெனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (உ-2)



### சொலமன் தீவில் பூமியதிர்ச்சி

(ஹொனியாரா)
தென்பசுபிக் கடற்பிராந்தியப் பரப்பிலுள்ள சொலமன் தீவுகளில் பாரிய பூமி அதிர்ச்சி நேற்று ஏற் பட்டுள்ளது.

சுமார் 7.2ரிச்சர்ட் அளவில் பதிவான இந்தப் பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட சேதவிபரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

ஆயினும் கட்டடங்கள் மற்றும், உயிர்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. (பி-2)

# அதீத சக்தி பெறுவதற்காக மனித இறைச்சியை சமைத்துச்சாப்பிட்ட இளைஞர்

(ஜகார்த்தா)
இந்தோனேஷியாவில் அமானுஷ்ய சக்தி பெறவேண்டும் என்பதற்காக மூன்றுபேரின் உடல்களைக் கறி சமைத்துச்சாப்பிட்டதாகக் கூறப்படும் இளைஞரை இந்தோனேஷியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சுமந்தோ(31)என்ற அந்த நபர் கல்லறையில் இருந்த 80வயது மூதாட்டியின் உடலைத் தோண்டியெடுத்து உறுப்புக்களை வெட்டிச் சமைத்துச் சாப்பிட்டதாகக் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் இதைப் போல் மேலும் இருவரைக் கொன்று சாப்பிட்டது தெரியவந்தது.

அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் இதைப் போல் மேலும் இருவரைக் கொன்று சாப்பிட்டது தெரியவந்தது.

''அமானுஷ்ய சக்தி''யைப் பெறவும், ஆத்மா நற்கதி அடையவும இதைப் போல் மொத்தம் 7பேரைக் கொன்று தின்னத் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பூர்வலிங்கா என்ற இடத்தில் உள்ள மத்திய சிறையில் அவர் தற்போது அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் ஜாவா பழங்குடி மக்களிடையில் இயற்கைக்கு விரோதமான இவ்வாறான பல மூடப்பழக்கவழக்கங்கள் இன்னமும் இருக்கின்றன. (பி-2)

# பிலிப்பைன்ஸ் அதிபர் பதவிக்கு ஜெனரல் ரொமோஸ் மீண்டும் போட்டியிடமாட்டார்

(சிங்கப்பூர்)
முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் பிடல்ரொமோஸ் அடுத்த ஆண்டு நடைபெறப்போகும் அதிபர் தேர்தலில போட்டியிடமாட்டார் என்று தெரியவருகின்றது.

சிங்கப்பூரில் சில தினங்களுக்கு முன் 'கொல்ப்' விளையாட்டுக்களில கலந்துகொண்ட திரு ரொமோஸ் அடுத்த தேர்தலில் போட்டியிடும் எண்ணம் ஏதும் தமக்கு இல்லையென்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

சிங்கப்பூரிலுள்ள பிலிப்பைன்ஸ் தூதரகத்தில் வைத்து நிருபர்களைச் சந்தித்துப்பேசிய ஜெனரல் ரொமோஸ், நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை ஆனால இப்போதைய அதிபர் அரயோவின் திட்டங்களைக் குறிப்பாக ஏழ்மையைக் குறைக்கும் திட்டங்கள் நிறைவேற ஒத்துழைக்கப்போகின்றேன் என்றார்.

தற்போதைய அதிபர் குளோறியா அரயோ மீண்டும்அதிபர் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லையென்று எதிர்பாராத வித்தத்தில் அறிவித்ததையடுத்து, ஜெனரல் ரொமோஸ் மீண்டும் போட்டிக்கு நிறுத்தப்படலாம் என்று ஏற்பட்டிருந்த கோஷங்களைக் குறித்து சிலர்கள் அவரிடம கேள்விகள் எழுப்பியுள்ளார்கள்.

நான் போட்டியிடமாட்டேன் ஆனால் எனது கடசி நிறுத்தும வேட்பாளரை, ஆதரிப்பேன் என்று அவர் கூறினார்.

பிலிப்பைன்சில் அதிபர் பதவியில் இரண்டு முறைக்கு மேல் ஒருவர் இருப்பதை அரசியல்சட்டம் அனுமதிக்காமல் போனாலும் இது அடுத்தடுத்து வரும்முறைகளை மட்டும்தான் தடுக்கின்றதா அல்லது ஒரு முறை பதவிவகித்து விலகியபின் வேறொரு முறைபதவிக்கு வருவதையும் தடுக்கின்றதா என்பதில்கருத்து வேறுபாடு உள்ளது.

இதுபற்றி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கோருவதற்கு அரசியல் கட்சிகள் ஆமோதித்து வருகின்றன. (பி)

### ஆந்திராவில் 3தீவிரவாதிகள் பலி

(புதுடில்லி)
ஆந்திரா மாநிலத்தில் ஏற்பட்ட மோதல்ச் சம்பவம் ஒன்றின் போது 3தீவிரவாதிகள் கொல்லப்படடனர்.

ஆந்திரா மாநிலப் பொலிஸாருக்கும் நக்ஸலைற் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின் போதே இம் மூன்று தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். (பி-2)

# இந்தியாவுக்கு ரஷ்யாவின் விமானம் தாங்கிக்கப்பல்

(புதுடில்லி)
விமானந்தாங்கிக் கப்பலை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்வதில் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

ரஷ்யாவுக்கு இது தொடர்பான விஜயமொன்றை மேற்கொண்ட பின்னர் நேற்று முன்தினம் நாடு திரும்பிய அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்துத் தமது விஜயம் தொடர்பான விபரங்களை வெளியிட்டுளார்.

விமானம் தாங்கிக் கப்பலை ரஷ்யாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் இதற்கான இணக்கத்தை ரஷ்யா தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதே சமயம் ரஷ்யாவுடன் பாதுகாப்புக் கருதி செய்துகொள்ளப்பட்ட அனைத்து உடன்பாடுகளையும் வெளிவிட முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (பி-2)

★ சமாதானத் தீர்வு ஏற்படும் வரை

# கட்டாய இராணுவ சேவை அமுலாக்குவதை

# எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது

## மிலிந்த மொறகொடவின் யோசனைக்கு எதிர்ப்பு அலை

(கொழும்பு)

எல்லாஇன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப்பகிர்வுடனான ஒரு சமாதானத் தீர்வை நடைமுறைப் படுத்தும் வரை அமைச்சர் மிலிந்த மொற கொட வின் கட்டாய இராணுவ சேவைத் திட்டம் நடைமுறைக்கு வருவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தென்கிழக்குப் பல்கலைக் கழக அரசியல் விஞ் ஞானச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், அமைச்சர் மிலிந்த மொறகொட முன்வைத்துள்ள கட்டாய இராணுவசேவை இந்த நாட்டில்வாழும் சிறுபான்மை இன மக்களை வெகுவாகப் பாதிக்கக் கூடியதாகும்.

துப்பாக்கியின் இரைச்சல்களும் பீரங்கிகளின் முழக்கங்களும் இப்போதுதான் சற்று ஓய்வெடுக்கின்றன.

இந்த ஒய்வு நிரந்தரமானதாக அமைய வேண்டும் என எல்லா இன மக்களும் பிரார்த்திக்கின்றனர்.

இன முரண்பாட்டுத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஒரு புறம் முன்னெடுக்கப்பட மறு புறம் இன முரண்பாட்டினைத் தூண்டி விடும் முயற்சிகளும் இடம் பெறுவதனை இந் நாட்டில் உள்ள எல்லா இன மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய எமது நாட்டின் உள்ளக அரசியல் சூழலை அவதானிக்கும் போது, இத்தகைய கட்டாய இராணுவ சேவை குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசியல் அமைப்பு ரீதியாக ஒவ்வொரு இனத்தவரினதும் உணர்வுகளுக்கு சமத்துவமான உத்தரவாதம் வழங்கப் படவில்லை. இதனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட இன முரண்பாட்டுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப் படவில்லை.

ஒரு இனத்தவர் மீது இன்னொரு இனத்தவருக்கு இருந்து வரும் சந்தேகங்கள் களையப்படவில்லை. மொத்தத்தில் தேசிய ஒருமைப்பாடு என்பது ஏற்படுத்தப்பட வில்லை.

இத்தகையதொரு நிலையில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் முன் மொழிவு சிறுபான்மையின மக்களை வெகுவாகப் பாதிக்கக் கூடிய தொன்றாக அமையப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

இனவாதம், மொழிவாதம், பிரதேசவாதம் போன்ற பிரிவினை வாதங்களைக் கடந்து தேசியவாதம் என்கின்ற எல்லையினுள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் உள்வாங்கப்படுகின்ற போது தான் கட்டாய இராணுவ சேவை பற்றி சிந்திக்க முடியும் என்பதை அமைச்சர் மொறகொடவும் இந்நாட்டு மக்களும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## நெருப்புக் காய்ச்சலுக்கு வாய்வழி மருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும் நெருப்புக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த வாய்வழி உட்கொள்ளும் மருந்து அனுப்பி வைக்கப்பட விருப்பதாக சுகாதாரஅமைச்சின் செயலாளர் ரெஜி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊசி மற்றும் வில்லைகள் மூலமே இதுவரை நெருப்புக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் வாய் வழி மூலமாக வழங்கப்படும் மருந்து விரைந்து நோயைக் கட்டுப்படுத்தும் என்றும்அவர் தெரிவித்துள்ளார். (உ)

## கடலில் தத்தளித்த இந்தியக் கப்பல்களை இலங்கை படகுகள் மீட்டன

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பகுதியில் கடும் காற்றுக் காரணமாக தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு இந்தியக் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்திற்கு மீட்டு வரப் பட்டுள்ளன.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து 50 கடல் மைல் தூரத்திற்கு அப்பால் கடல் கொந்தளிப்புக் காரணமாக தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு இந்தியக் கப்பல்களை இலங்கைக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த வேறு இரண்டு இந்திய இழுவை மீன்பிடிக் கப்பல்களால் காப்பாற்றப்பட்டு திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த 11 ஆம் திகதி கொச்சின் துறைமுகத்திலிருந்து சென்னைத் துறைமுகம் நோக்கி மாதும்ப என்ற கப்பல் கடல் பயணத்தை தொடங்கியது. வழமையான நடைமுறையில் அக்கப்பல் 17ஆம் திகதி சென்னை துறை முகத்தை சென்றடைந்திருக்க வேண்டும்.

ஆனால் கடல் கொந்தளிப்புக் காரணமாக அக்கப்பல் அங்குசெல்லவில்லை. இதனையடுத்து சகிரா என்ற கப்பல் அவ்விடத்திற்குச் சென்று மாதும்பகப்பலை காப்பாற்ற முனைந்தது.

எனினும் கடற் கொந்தளிப்புக் காரணமாக இரண்டு கப்பல்களின் இயந்திரங்களும் பழுதடைந்தன.

இதனையடுத்து இலங்கைக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த இரண்டு மீன்பிடி இழுவைப் படகுகளின் மூலம் இரு கப்பல்களும் காப்பாற்றப் பட்டன. மாதும்ப சகிரா என்ற இரண்டு கப்பல்களும் தற்பொழுது திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன. (உ-5)

## ஐ. நா. செயலர் பதவி இம்முறை இலங்கையருக்கு

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கோபி அனான் ஒய்வுபெறுவதனால் ஏற்படக்கூடிய வெற்றிடத்திற்கு இம்முறை ஆசிய நாட்டவர் ஒருவரே தெரிவு செய்யப்படவுள்ளதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், ஐ நா.வின் ஆயுதக் குறைப்பு விவகாரங்களுக்கு தலைவராக செயற்பட்டு வரும் இலங்கைக்கான ஜயந்ததனபாலவுக்கு இந்தப் பதவி கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக ''த ஜேன்ஸ் பொறின் றிவியூ'' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆனால், அப் பதவிக்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் போட்டியிடவுள்ளார்.

இதேவேளை லண்டனில் பிறந்த இந்தியரான பத்தி எழுத்தாளரும், வரலாற்று ஆசிரியருமான ஷஷிதாரூர் என்பவருக்கே இப் பதவி கிடைக்கலாமென்று பெரும்பாலும் எதிர்வு கூறப்பட்டு வருகின்றது. நீண்டகாலமாக கோபி அனானுக்கு உதவியாளராகச்செயற்பட்டு வரும் இவருக்குபொது வரவேற்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன் ஐ. நா. செயலர் பதவியை வகித்தவர் ஆசியாக் கண்டத்தவர் பர்மியரான யூ தாண்ட் ஆவார்.

இன்று ஈராக்கை மையமாகக் கொண்டு எழுந்துள்ள போர்ச் சூழலில் அப் பதவியில் இருப்பவருக்கு உதவி புரிவதே தனக்குள்ள நோக்கம் என்று ஷஷி தாரூர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜயந்த தனபாலா இப் பதவிக்கு போட்டியிடவிரும்பவில்லையென்றும், செயலாளர் நாயகம் பதவி டிசம்பரில் வெற்றிடமாகு முன்னரே மே மாதம் ஒய்வு பெற்றுக்கொண்டு இலங்கை திரும்ப எண்ணியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ)

## நிவிதென்னவில் ரயில்நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வடக்கேஉள்ள நிவிதென்ன பிரதேசத்தில் புதிதாக ரயில்நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சு ஆலோசகர் அலி சாகீர் மௌலான கேட்டுக்கொண்டதற்கிணங்க, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். (உ-8)

## நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிக்க வேண்டாம்

(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவைக்கு இலங்கைநிர்வாக சேவையைச் சேர்ந்தஅதிகாரிகளை நியமிக்க வேண்டாம் என கல்விநிர்வாக சேவைச் சங்கத் தலைவர் அசோக ஜெயசிங்க அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

கல்வி தொடர்பான பிரச்சினைகளை எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து ஆராய நன்குபரிச்சயப்பட்ட கல்வி அதிகாரிகளையே நியமிக்க வேண்டும்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அசோக்க ஜெயசிங்க,

தற்போதய நிர்வாகசேவை அதிகாரிகள் நியமனத்தினால் கல்வி நிர்வாகம் முழுவதுமே ஸ்தம்பிதம் அடைந்துள்ளது

நிர்வாக பிரமாணங்களின் படி கல்வி நிர்வாகத்தில் பணியாற்றுவதற்கு நிர்வாகச் சேவையைச்சேர்ந்த 8அதிகாரிகளுக்கு மாத்திரமே திறமையுள்ளது.

அந்நிலையில் மூப்பதிற்கும் அதிகமான நிர்வாக சேவை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றார். (உ-10)

## முறைப்பாடுகளை விசாரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரச அலுவலர்கள்தொடர்பாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை துரிதமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலிஅலுவிகார தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கிடைத்த ஊழல் மோசடி தொடர்பான முறைப்பாடுகளையடுத்தே இவ் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

முறைப்பாடுகளை விசாரித்து குற்றவாளிகள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் (உ-10)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

**பரிசில்கள்**

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கடபடும்.

★ அமரர் ச. அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்.

**போட்டியின் விதிகள்:**

★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

★ புல்ஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்,

★ கட்டுரைகள் 25 - 01 - 2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்,

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ——————————
——————————

பாடசாலை ——————————
——————————

கற்கும் தரம் ——————————

உறுதிப்படுத்துகிறேன் ——————————

வகுப்பாசிரியர்

# பாதிப்புற்ற வீடுகளைப் புனரமைக்க 30 இலட்சம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு காரணமாக சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கு 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் முதல் பெய்துவரும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட ஆயிரத்து 937 வீடுகளுக்கு இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 13 இலட்சத்து 26 ஆயிரத்து 500 ரூபாவும், பொலநறுவை மாவட்ட வெலிகந்த பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 282 வீடுகளுக்கு 12 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாவும், லங்காபுர பிரதேச செயலர் பிரிவில் உள்ள 276 வீடுகளுக்கு 2 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவும், திப்புலாகல பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இந்தவகையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளின் விபரங்கள் கிடைக்கப் பெற்றதும் அம்மாவட்டங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் என சமூக சேவைகள் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

# அடுத்தவாரம் பிரதமர் ரணில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் புதுடில்லி பயணமாகவுள்ளதாக பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது நாட்டின் அதிஉயர் பாதுகாப்புவலயம், தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள், சார்க் உச்சிமாநாட்டை விரைவில் நடத்துவது ஆகியவிடயங்கள்குறித்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் முன்னாள் இராணுவத்தளபதி சதீஸ் நம்பியார், பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் முக்கிய அதிகாரிகளையும் பிரதமர் அங்கு சந்திக்கஉள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# ஐ.தே.கவை மீளமைக்க பிரி.குழு ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மீளமைப்பது குறித்த ஆலோசனைகளை வழங்க பிரித்தானியவில் இருந்து அரசியல் ஆலோசகர்கள இலங்கை வரவுள்ளனர்.

நான்குபேர் கொண்ட இவ் ஆலோசனைக் குழு, ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் குறித்த திட்டங்களை வரைவு செய்தல், அரசியல் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடவுள்ளது. (உ)

# படையினர் வசமுள்ள வீடுகள் விபரம் சேகரிப்பு

## பணியில் 6குழுக்கள் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் வீடுகள் பற்றிய மதிப்பீடு இன்றுமுதல் இடம்பெறவுள்ளது.

ஆறுகுழுக்கள் இந்தப்பணியில் ஈடுபடும் என்றும், ஒவ்வொரு குழுவிலும் இராணுவ உத்தியோகத்தர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர், யாழ் மாவட்டச் செயலக உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் அடங்குவர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (உ)

# பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தால் கடந்தவருடம் நடத்தப்பட்ட வெளிவாரி பொதுக்கலைமாணி பகுதிஒன்றின் பரீட்சை பெறுபேறுகள் அடுத்தமாத நடுப்பகுதியில் வெளியாகவுள்ளன.

இம்மாதம் 15 ஆம் திகதி இப்பெறுபேறுகள் வெளியாகும்என முன்னர் தெரிவிக்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தென்னாபிரிக்க சமாதான ஆர்வலர் குழு யாழில்

(தென்மராட்சி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னரான யாழ். குடாநாட்டு நிலைமைகள் பற்றி ஆராயும் வகையில் தென்னாபிரிக்க சமாதான ஆர்வலர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலைய அங்கத்தவர்கள் மற்றும் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், யாழ் பல்கலைக்கழக கல்விமான்கள் ஆகியோரைச் சந்தித்து இவர்கள் தற்போதைய நிலைகுறித்து கேட்டறிந்து வருகின்றனர்.

மூவர் கொண்ட இக்குழு நாளை வியாழக்கிழமை வரை இங்கு தங்கி நின்று தமது ஆராய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. (உ-77)

# றீகல் திரைப்பட விழாவில் சிங்களத்திரைப்படம் தெரிவு

(கொழும்பு)

லண்டனில் றீகல் திரைப்பட விழாவில் இலங்கைத் தயாரிப்பான 'பனிக் கட்டுவில் சியாந்தன்ன' என்ற சிங்களத் திரைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேசரீதியாக 8 விருதுகளை வென்றெடுத்ததான புரட்சிகரமான இத் திரைப்படம் அடுத்த மாதமளவில் லண்டனில் திரையிடப்படவுள்ளது.

அசோக்க ஹந்தகம என்பவர் இத் திரைப்படத்தை இயக்கி உள்ளார். (உ-10)

# சுற்றாடல் அமைச்சர்கள் கூட்டம்

(கோட்டை)

'சார்க்' அமைப்பின் சுற்றாடல் துறை அமைச்சர்கள் இந்த வாரம் கொழும்பில் கூடவிருக்கிறார்கள் பிராந்திய அளவில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளமாட்டாதெனத்தெரிகின்றது.

இரு தினங்கள் நடைபெறும் இம்மாநாட்டில் 'சார்க்' செயலாளர் நாயகமும் கலந்துகொள்வார் என்று தெரிகின்றது. (பி)

# 2ஆம் கட்ட போஷாக்கு உணவு வழங்கும் திட்டம்

(சுதுமலை)

வலி-தென் மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக்கோட்டை, மானிப்பாய், மாதகல், பண்டத்தரிப்பு, நவாலி சண்டிலிப்பாய், சுதுமலைப் பகுதியில் இனம் காணப்பட்ட போஷாக்கற்றவர்களுக்கான இரண்டாம் கட்டபோஷாக்கு உணவு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

20 கர்ப்பவதிகளும், 5 வயதுக்குட்பட்ட 50 சிறுவர்களும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-252)

# ஐரோப்பிய ஆணைக்குழு அதிகாரிகள் இலங்கையில்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஆணைக்குழு வழங்கக் கூடிய உதவிகளை குறித்து மதிப்பீடுகள் செய்யவென ஐரோப்பிய சமூகத்தின் பல தரப்பட்ட திணைக்களங்களினதும் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து எதிர்வரும்ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாடு குறித்து அறிவிப்புவெளியான நிலையில் 2003, 2004 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்கான நிதி உதவி பற்றிய இறுதித் தீர்மானங்களையும் இவ் ஐரோப்பிய சமூகம் மேற்கொள்ளவுள்ளது. (உ-8)

# பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை குழு மீண்டும் யாழ் வரும்

(யாழ்ப்பாணம்)

லண்டனிலிருந்து பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வைத்தியநிபுணர் குழுஒன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

வைத்திய கலாநிதி சாள்ஸ் விவேகானந்தர் தலைமையில் வரும் இக்குழு இரண்டு வாரங்கள் இங்கு தங்கியிருந்து பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

மூக்கு, தொண்டை, கை, கால், வாய் உட்பட பல உறுப்புகளுக்கு இக்குழு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி வைத்திய நிபுணர் குழு கடந்த வருட முற்பகுதியில் யாழ். வந்து 600 இற்கும் அதிகமானவர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# 6210 பேர் சிகிச்சை

(கொழும்பு)

புதிதாக திறந்து வைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட முதலாம் கட்ட வைத்திய சாலையில் கடந்த டிசம்பர் மாதம் மட்டும் 6 ஆயிரத்து 210 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் 4 ஆயிரத்து 798 பேரும், உள்ளக சிகிச்சை களத்தில் 100 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். (உ-3)

# சார்க் மாநாட்டை கூட்ட இலங்கையின் ஒத்துழைப்பு

## சார்க் செயலர் கோருகிறார்

(கொழும்பு)

தாமதம் அடைந்துவரும் சார்க் உச்சிமாநாட்டை விரைவில் கூட்டுவதற்கு இலங்கை முக்கியபங்கு வகிக்க வேண்டுமென சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் கியூ. எம். ஏ. ரஹீம் கேட்டுள்ளார்.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர்டிரோன் பெர்னாண்டோவை சந்தித்தபோதே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

7 நாடுகள் அங்கம்வகிக்கும் சார்க்அமைப்பில் அரசியலில் நடுநிலையைக் கடைப்பிடிக்கும் நாடாகஉள்ள இலங்கை சார்க் உச்சிமாநாட்டைதடை இன்றி நடத்துவதில் முக்கிய பங்கை வகிக்கமுடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு இணங்கியுள்ள வெளிவிவகாரஅமைச்சர்இதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் 12 வது உச்சி மாநாடு சென்றவாரம் இஸ்லாமபாத்தில் நடைபெற இருந்தது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள கருத்து முரண்பாடுகள் சீரற்ற உறவுகள் காரணமாக இம்மாநாடு பின்போடப்பட்டது.

எதிர்வரும் மார்ச் மாத நடுப்பகுதியில் இம் மாநாட்டை நடத்த முடியும் என பாகிஸ்தான் அறிவித்திருந்த போதிலும், அதற்கான திகதி பற்றிய அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை, சார்க் உச்சி மாநாட்டில் பங்கு பற்றுவது தொடர்பான இந்தியாவின் அறிவிப்பு வெளியாகும் வரை அது குறித்த அறிவிப்பை வெளியிட விரும்பவில்லை என பாகிஸ்தான் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அடுத்தவாரம் இந்தியா பயணமாகவுள்ள பிரதமர் இம் மாநாட்டை தடை இன்றி நடத்துவதற்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் என இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைக் கேட்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# தாய்லாந்தைப் போல தற்காலிக பிக்குகள் இங்கேயும் நியமனம்

(ஹொரணை)

பௌத்த கோயில்களில் குருமார்கள் இல்லாத குறைப்பாட்டை தீர்ப்பதற்காக தற்காலிக பிக்குமார்களை அபிஷேகம் செய்து அமர்த்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தாய்லாந்தில் இவ்வாறான முறை நடைமுறையில் இருப்பதாகவும் அந்த முறை இப்பொழுது இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் ஹொரணையில் வேந்தவல தியான நிலையத்தில் 13 சாதாரண நபர்கள் தற்காலிக பிக்குகளாக அபிஷேகம் செய்யப்பட்டனர்.

சிங்கப்பூர், மலேஷிய சங்கநாயக்கர் வண கிரிந்த தம்மானந்த நாயக்க தேரர் இந்த அபிஷேகத்தை செய்து வைத்தார். சிறிகல்யாணி தர்ம மகா சங்கசபாவின் தலைவர் வண பெல்லன சிறி குணவிமல தேரரும் இதில் கலந்து கொண்டார்.

70 வீதம் பௌத்தர்களைக் கொண்ட ஒரு நாட்டில் 1000 க்கும் மேற்பட்ட பௌத்த கோயில்கள் பிக்குகள் இல்லாமல் நடைபெற்று வருகின்றன என்று இந்த வைபவத்தில் பேசிய விமல ஜோதிதேரர் கூறினார். தற்காலிக பிக்குகளாக அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் நிரந்தரமாகவே பிக்குகளாக இருக்க விரும்பினால் அவர்கள் வெகு தொலைவான இடங்களில் பிக்குகளாக செயல்பட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (பி)

# சமந்த கொலை 19 சந்தேக நபர்கள் விடுதலை

(கோட்டை)

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக் கழக மாணவன் ஒ-வி-சமந்த கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களான 19 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

கோட்டை நீதிமன்றத்தில் இந்த சந்தேக நபர்கள் அடையாளம் காண்பதற்காக ஆஜர் செய்யப்பட்ட போதிலும் எவரும் அடையாளம் காணப்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் போது இந்த நபர்கள் தேவைப்பட்டால் அழைக்கப்படுவார்கள் என்று நீதிபதி அறிவித்தார்.

இந்த வழக்கு தொடர்பாக பொலிசார் 1200 பக்கங்கள் கொண்ட அறிக்கையொன்றை சட்டமா அதிபருக்கு வழங்கியுள்ளனர்.

இந்தக்கொலைச்சம்பவத்தையடுத்து மூடப்பட்ட பல்கலைக்கழகம் மீண்டும் ஜனவரி 27 ஆம் திகதி திறக்கப்படவிருக்கின்றது. (பி)

## கட்டாக்காலி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்று காலை முதல் கட்டாக்காலி நாய்கள் அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி கலாசாலை வீதி, முருகன் வீதி, பாற்பண்ணை வீதி, இராசவீதி, ஆடியபாதம் வீதி ஆகிய பகுதிகளில் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளை பிரதேச சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# உயர்பாதுகாப்பு வலய பிரதேசங்களில்

# மக்கள் மீளக் குடியமர்த்தக் கோருவது அவர்களின் அடிப்படை உரிமை

## மகிந்தவிற்கு துணைவேந்தர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ். பல்கைக்கழக உபவேந்தர் பேராசரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்துகலாசார அமைச்சரினால் ஆனைப்பந்தியில் அமைக்கப்பட்ட குருகுல திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்;

**மீள் குடியமர்வு அடிப்படை உரிமை**

யாழ். குடாநாட்டில் உள்ள அதிஉயர் பாதுகாப்புவலய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளவும் குடியமர்த்த வேண்டும். மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தக் கோருவது, அர்களது அடிப்படை உரிமை யாகும். அந்த அடிப்படை உரிமையைத்தான் மக்கள் கேட்கிறார்கள். அரசு அழிவினால் சிதைந்துபோ யுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்பிரதேசங்களுக்கான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

தற்போது அரசும் விடுதலைப் புலிகளும் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிக்கு எதிர்க்கட்சி ஆதரவு வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் உபவேந்தர், எதிர்க்கட்சித் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில்;

**முரண்பாடுகள் நீங்கவேண்டும்**

நிரந்த சமாதானம் நாட்டில் ஏற்படவேண்டுமாயின், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற முரண்பாடுகள் நீங்கி, இவ்விருகட்சிகளும் இணைந்து செயற்படுவதுடன் எதிர்க்கட்சியினர் அதற்கான ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

யாழ். குடாநாட்டில் கடந்த காலத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக பல பொதுக்கட்டடங்களும் அரசு கட்டடங்களும் இடித்தழிக்கப்பட்டன.

இவற்றினை புனர்நிர்மானம் செய்யும் நோக்குடன் தற்போது அவை மீள அமைக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன.

அந்தணர்கள் இந்நாட்டுக்கு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர்.



அதற்கு வழி காட்டியாகவும் உள்ளனர் என்பதனை இந்நிகழ்வின் போது உரையாற்றிய சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினரின் பேச்சுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வைபவத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த பொதுஜனஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். பௌஸி,

**அச்சம் நீங்கிவிட்டது**

கடந்த 1994 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நான் சுகாதார அமைச்சராக இருந்த போது யாழ், குடாநாட்டுக்கு வந்தேன். ஆனால், அன்றைய காலத்தில் யாழ். குடாநாட்டில் கால் வைத்த போது அச்சத்துடனேயே இருந்தேன்.

அவ்வாறானதொரு நிலை நீங்கி இப்போது பூரணமான சுமுகமான நிலை காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தும் இருக்கவேண்டும்.

இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. அந்த வகையில் தமிழ்மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு எனவும் தெரிவித்தார். (வ-8-43)

# உலக வங்கி வழங்கும் நிதியை அரசு திருப்பிச் செலுத்த வேண்டும்

## மீக்கோ நிசுமிசு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் சிதைந்து போயுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு என உலகவங்கியினால் வழங்கப்பட்டுவரும் நிதி உதவிகளை அரசாங்கம் திருப்பிச் செலுத்த வேண்டும் என உலக வங்கியின் தெற்காசிய துணைத் தலைவர் மீக்கோ நிசுமிசு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய தெற்காசிய துணைத்தலைவர் மீக்கோ நிசுமிசு செய்தியாளர் மத்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீக்கோ நிசுமிசு இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப்புலிகளை அரசாங்கம் அங்கீகரிக்கும் போது, அவர்களூடாக நிதிஉதவிகளை வழங்குவதில் எந்தப் பிரச்சினைகளும் இருக்கமாட்டாது.

அரசு தற்போது முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளை பிரசாரப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை போது மானதாக இல்லை என்று கூறிய மீக்கோ நிசுமிசு வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கு அடுத்த மாதம் முதல் நிதி உதவியை வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார் (வ)

# எழுதுநர் சேவை ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு யாழ். மாவட்டத்தில் 112 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக 2002 - யூலையில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் இருந்து 112 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 26 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 25 பேரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டதைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளது.

யாழ் மாவட்டத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளோரின் பெயர் விபரங்கள் வருமாறு:

சண்முகலிங்கம் தர்சினி (திருநெல்வேலி வடக்கு), தயாளன் தாரினி (துன்னாலை கிழக்கு), ஸ்ரீதரன் மனஸ்வினி (கோண்டாவில் கிழக்கு), மகேந்திரன் ரமண்ன் (இமையாணன் கிழக்கு), தம்பி ஐயா வளர்மதி (உடுவில் தெற்கு)-

கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன் (தாவளை இயற்றாலை), கந்தசாமி கதிர்காமர் (திருநெல்வேலி தெற்கு), நடராஜா சுபாஜினி (பிரதானவீதி, சங்கானை), தியாகராஜா பத்மதாஸ் (வேலணை மேற்கு), குணசிங்கம் பிரசன்னா (கரவெட்டி கிழக்கு)

ஆனந்தராசா கில்டா தர்சிகா (நெல்லியடி), இராமச்சந்திரன் கவிதா (உரும்பிராய் வடக்கு), சிவப்பிரகாசம் மதியழகன் (அரசடிவீதி, யாழ்.), திருத்தணிகாசலம் காயத்திரி (திருநெல்வேலி கிழக்கு), குமாரசாமி கௌசல்யா (அரியாலை),-

இராஜரட்ணம் சாமினி (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை), இராமசாமி இளங்குமரன் (புலோலி தெற்கு), கணேசதாசன் காயத்திரி (சுதுமலை தெற்கு), மகேந்திரன் அருண் ராஜ் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்.) நவரட்ணராஜா வளர்மதி (புலோலி மேற்கு) -

பரமசாமி அகல்யா (கந்தர்மடம்), இராசையா இரட்னேஸ்வரி (கோப்பாய் மத்தி) இரவீந்திரன் சுபோதினி (கச்சேரி நல்லூர் வீதி), கிருஸ்ணகுமார் மைதிலி (திருநெல்வேலி கிழக்கு), சண்முகசுந்தரம் தயாபரன் (கல்வியன்காடு) -

சுவாமிநாதன் அபிராமி (உடுப்பிட்டி), வசந்தராசா தர்சினி (தும்பளை), வேலாயுதம் சிவராஜா (கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.), யோகதாசன் சிவகலா (பருத்தித் துறை), ஈஸ்வரதாசன் கலைமதி (வைமன் வீதி நல்லூர்) -

இளங்கோ ரமணன் (கரணவாய் தெற்கு), ஜெயரட்ணம் அமலா (இளவாலை மயிலங்கூடல்), கந்தவனம் றொபினா உதயந்தி (மத்தியூஸ் வீதி, யாழ்.) கதிர்காமத் தம்பி பிரதீபன் (உடுவில் கிழக்கு), குமரேசன் சிவானந்தினி (கொக்குவில்)-

இராஜகுலசிங்கம் சுதர்சினி (பிறவுண் வீதி, யாழ்.), மகேந்திரம் மஞ்சுளா (கரவெட்டி கிழக்கு), நடராஜா கோசலாதேவி (மணிக் கூட்டு வீதி, யாழ்.) பரமேஸ்வர நாதன் யஷீலா (கோண்டாவில் கிழக்கு), பற்குணராஜா பிரதீபன் (சிவன்பண்ணை வீதி, யாழ்)-

இராமநாதன் விஜிதா (கோவில் வீதி, யாழ்.), தர்மசீலன் சதீஸ்வரன் (கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம்), உருத்திரசுந்தரம் தவபாலன் (அரசடி வீதி, யாழ்.), வல்லிபுரம் சிவகுமாரி (கரவெட்டி மத்தி), சிவபுண்ணியம் மாதினி (கரணவாய் தெற்கு) -

அசோகன் தாட்சாயினி (லவ்வேன் உடுவில்), ஈஸ்வரநாதபிள்ளை குமாரன் (சுதுமலை தெற்கு). கனகரட்ணம் சிந்துயா (மானிப்பாய் வீதி, உடுவில்), கார்த்தி கந்தசாமி நித்தியா (இடைக்குறிச்சி, வரணி), மகேந்திரன் ஜெயந்தன் (புத்தூர் கிழக்கு)-

பூபாலசிங்கம் சுதர்ஜிகா (புலோலி மத்தி), சந்திரகாந்தன் ஜெயச்சித்திரா (கூழானை, சுன்னாகம்), சண்முகநாதன் உமாகாந்தன் (துன்னாலை), சிவானந்தன் தர்மிலா (மீசாலை வடக்கு), சிவபாலன் லக்ஸிதா (கொக்குவில் மேற்கு)-

சிவயோகி காயத்திரி (வங்களா லேன் மல்லாகம்), தம்பிஜயா மலர் மதி (உடுவில் தெற்கு), தங்கராஜ சிங்கம் தாரினி (கே.கே.எஸ் வீதி, யாழ்.),தர்மகுலசிங்கம் தயாளன் (நல்லூர் வடக்கு), தெய்வேந்திரன் சர்மிலா (கந்தர்மடம்) -

திருநாவுக்கரசு சுதர்சன் (கோண்டாவில் கிழக்கு), திருநாவுக்கரசு தேவகி (பொலிகண்டி), ஆனந்தலிங்கம் வனிதா (தும்பளை), மகாதேவன தயாபரன் (மல்லாகம்), நடேசன் இராமரூபன் (நீர்வேலிவடக்கு) -

நவரெட்ணம் அபிராமி (ஏழாலை மேற்கு), பஞ்சாச்சரம் சுபாகினி (கந்தர்மடம்), பிள்ளைமங்களம் ஜசோதரா (வட்டுக்கோட்டை), செல்வரட்ணம் சத்தியநாராயணன் (அரசடிறோட்,யாழ்.) சிவபாதம் சசிகாந் (கோவில் வீதி. யாழ்.)-

சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் (இளவாலை), தவச்செல்வம் முகுந்தன் (அத்தியடியாழ்.) கணேசதுரை வாசுகி (திருநெல்வேலி கிழக்கு), கணேசராச ஜெனிவா (பாரதி வீதி, கச்சேரி), கதிரவேலு ஜெயலட்சுமி (கலைமகள் வீதி, அரியாலை) -

கதிர்காமத்தம்பி குகதீபன் (உடுவில் கிழக்கு), கிருஷ்ணபிள்ளை கலைவாணி (திருநெல்வேலி வடக்கு), குமாரசாமி அம்பிகாஜினி (சிறுப்பிட்டி கிழக்கு), நடராஜா தனுயா (கரவெட்டி), நடராஜா சோபான (கொக்குவில் மேற்கு)-

பரமேஸ்வரன் சிவதர்சினி (கொக்குவில் மேற்கு), பிறேமச்சந்திரன் சியாமி (அளவெட்டி வடக்கு), ரட்ணசாமி கணேசராணி (கோப்பாய் தெற்கு), சபாரட்ணம் பிறேமினி (மகாத்மா வீதி, நெல்லியடி), சண்முகநாதன் ஜீவகன் (வண். மேற்கு)-

சிவஞானம் அன்ரனிற்ரா நிறஞ்சினி (சுண்டுக்குழி), சோமசுந்தரம் வரதராஜன் (சுண்டுக்குழி), தம்பிலதா (இடைக்காடு), தாமோதரம்பிள்ளை ராதிகா (கரணவாய் வடக்கு), தற்பரநந்தேஸ்வரசர்மா வதனா (துன்னாலை) -

குணசிங்கம் சோபியாயினி (உரும்பிராய் கிழக்கு), கந்தசாமி இராஜ இராஜேஸ்வரி (மட்டுவில் தெற்கு), நாகராஜா ரெஜிதா (சண்டிலிப்பாய்), பஞ்சலிங்கம் கலைவாணி (மானிப்பாய் தெற்கு), பத்மநாதன் மயூரா (அத்தியடி யாழ்.)-

இராஜேந்திரம் சாமினி (4ஆம் குறுக்குத்தெரு, யாழ்.) சண்முகநாதன் துசியா (கோண்டாவில் மேற்கு), சிவானந்தன் சக்தி (கந்தர்மடம்), சிவறூபன் சிவதர்சினி. (ஸ்ரான்லி வீதி, யாழ்.), தங்கராஜா குமாரதாசன் (தும்பளை வீதி, பருத்தித்துறை) -

தர்மலிங்குலசிங்கம் துஷ்யந்தி (கரவெட்டி தெற்கு), நவரெட்ணம் ரஞ்சனா (நுணாவில் மேற்கு) கணேசரட்ணம் அனித்தா (உடுவில் கிழக்கு), கிருஷ்ணமூர்த்தி அனுசியா (கோண்டாவில்), குலசிங்கம் பிரணாளினி (கோண்டாவில் கிழக்கு)-

குணசிங்கம் பிரதீபன் (கரவெட்டி கிழக்கு), இராஜேந்திரம் ராஜீவ் (கந்தர்மடம்), சந்திரபாலன் சுபோதினி (பொன்னாலை மேற்கு), சர்வணபவன் மயூரன் (வட்டுக் கோட்டை), செல்வராஜன் கலாவாணி (கொக்குவில்), சின்னத்தம்பி யதீசன் (திருநெல்வேலி), சிவகுருநாதன் பாமினி (சுன்னாகம் தெற்கு) (உ)

## முத்திரை சேகரிப்போர் சங்கம்

(கோட்டை)

இலங்கை முத்திரை சேகரிப்போர் சங்கம் தனது 25வது வெள்ளி விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

1978ல் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் ஆசிய முத்திரை சேகரிப்போர் சங்கத்தில் உறுப்புரிமை பெற்றுள்ளது.

வெள்ளிவிழாவையொட்டி இச்சங்கம் முத்திரைக் கண்காட்சியொன்றை நாடளாவிய ரீதியில் நடத்தவிருக்கின்றது. (பி).

## சிம்பாப்வே ஜனாதிபதிக்கு

# கைகொடுக்கத் தவறினால் சிறைத் தண்டனை

(கொழும்பு)

சிம்பாப்வே ஜனாதிபதி ரொபேர்ட் முகாபேயுடன் இங்கிலாந்து அணியின் தலைவர் நாசர் ஹுசைன் கை குலுக்காவிடில் இவருக்கு சிறைத்தண்டனை கிடைக்கலாம் என இங்கிலாந்திலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்தமாதம் 13அம் திகதி ஹராரேயில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது.

இதன்போது சிம்பாவே ஜனாதிபதியுடன் கைகுலுக்கப் போவதில்லை என இங்கிலாந்து அணித்தலைவர் கூறியதையடுத்தே மேற்படி செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

சிம்பாப்வேக்கு பயணம் வருவோர் அந்நாட்டு ஜனாதிபதியுடன் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டால் குற்றம் என்று இரண்டுவருடங்க்ளுக்கு முன்பு சட்டம் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டம் காரணமாக சிம்பாப்வேயை சேர்ந்தவர்கள் பலர் சிறைத் தண்டனைக்கு உள்ளாகியிருப் பதும் குறிப்பிடத்தக்கது (உ-3)

## உலகக் கிண்ண துப்பாக்கி சுடும் போட்டி டில்லியில்

(கொழும்பு)

உலகக் கிண்ண துப்பாக்கி சுடும் போட்டி டில்லியில் டாக்டர் கர்ணிசிங் ரேஞ்சில் நடைபெறவுள்ளது.

இதனுடன் ஆசியக் கிளை துப்பாக்கி சுடும் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ் உலகக்கிண்ண போட்டியில் கனடா, சீனா, இங்கிலாந்து, அயர்லாந்து. ஜேர்மனி, ஸ்பெயின், கங்கேரி,. கட்டார், ஹெலன், துருக்கி, தென்னாபிரிக்கா உட்பட 30 நாடுகளைச் சேர்ந்த 250 போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

# இன்று ஒரு தகவல்

## சண்டையை நிறுத்த சரியான மருந்து!

ஒரு கணவன் மனைவி. எப்போது பார்த்தாலும் அவர்களிருவருக்கிடையிலும் சண்டை வந்து கொண்டேயிருந்தது. இதிலே என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? நான் அதற்காகச் சொல்ல வரவில்லை. இது வேறு விஷயம். அதாவது சண்டை போடாமல இருப்பதற்கு வழி சொல்கிற தகவல் இது. நான் சொன்ன அந்தக் கணவன் மனைவி எப்படியென்றால்... கணவன் ஒரு வார்த்தை சொன்னால் மனைவியிடமிருந்து இரண்டு வார்த்தைகள் பதிலாக வரும். இதற்கு கணவனிடமிருந்து நாலு வார்த்தைகள் பதலாக வரும். இப்படி வார்த்தைகள் பெருகிப்போய் கடைசியில் வம்பிலே வந்து முடியும்.

அந்த அம்மா பொறுத்துப் பார்த்தார். அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை! பக்கத்து வீட்டிலும் ஒரு கணவன், மனைவி இருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை வருவதில்லை. ''அது எப்படி அவர்களால் மட்டும் சண்டை போடாமலிருக்க முடிகிறது?'' என்று அந்த அம்மாவுக்கு ஆச்சரியம். ஒரு நாள் பக்கத்து வீட்டு அம்மாவிடமே போய், ''ஏனம்மா! நீங்கள் எப்படிக் கணவனும் மனைவியும் சண்டைபோட்டுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்... அது எப்படி உங்களால் முடிகிறது?'' என்று கேட்டார்.

''அதற்கென்று ஒரு மருந்து இருக்கிறது. அதைச் சாப்பிட்டால் சண்டைவராது.'' என்றார் அவர், ''சரி, அந்த மருந்தை அவர் சாப்பிடமாட்டேன் என்று சொல்லிவிட்டால் என்ன பண்ணுவது?'' என்று கேட்டார் இவர். ''அந்த மருந்து அவருக்கு இல்லை அம்மா... உனக்குத்தான'' என்றார் அவர். ''அப்படியா? அப்படியென்றால் மிகவும் நல்லது, அதை எப்படிச் சாப்பிடுவது என்கிற விபரத்தைச் சொல்லுங்கள் எங்கே அது கிடைக்கும் என்பதையும் சொல்லுங்கள்'' என்று கேட்டார் இவர். வேறு எங்கேயும் போய் வாங்க வேண்டாம். என்னிடமே அந்த மருந்து இருக்கிறது. அதிலே கொஞ்சம் தருகின்றேன். வாங்கிவைத்துக் கொள்ளுங்கள். உன் வீட்டுக்காரர் உன்னோடு சண்டையை ஆரம்பிக்கின்ற போதெல்லாம் நீ இந்த மருந்திலே ஓர் அவுன்சு வாயில் ஊற்றிக் கொள்ள வேண்டும். அதை உடனே குடித்து விடக்கூடாது. ஓர். ஐந்து நிமிடமாவது அது வாயில் இருக்க வேண்டும். அதன் பின்னர் குடித்து விடலாம்'' என்று சொல்லி ஒரு போத்தல் மருந்தை அந்த அம்மாவிடம் கொடுத்து அனுப்பினார்.

மருந்தை எடுத்துக்கொண்டு இந்த அம்மா வீட்டுக்கு வந்தார். வீடு பூட்டியிருந்ததனால் கணவன் வந்து வாயிலிலே காத்துக் கொண்டிருந்தான். மனைவியைக் கண்டதும் சண்டை போட ஆரம்பித்து விட்டான். ''வீட்டைப்பூட்டி விட்டு எங்கே போனாய்? எவ்வளவு நேரமாக ஒரு மனிதன் வாயிலில் காத்துக் கொண்டிருப்பது?'' என்றான். மனைவி இதற்குப் பதிலே சொல்லவில்லை. அந்த அம்மா வீட்டைத்திறந்து சமையல் அறைக்குள் போனார். ஒரு அவுன்ஸ் மருந்தை வாயில் ஊற்றிக் கொண்டார். அன்றைக்குச் சண்டை மேற் கொண்டு வரவில்லை... நின்று விட்டது பரவாயில்லை! அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் சண்டை வரும் போல இருக்கிற போதெல்லாம் இந்த மருந்து அதை நிறுத்தியிருக்கிறது.

''பிரமாதமாக இருக்கிறது இது. இதைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கி வீட்டிலே வைத்துக்கொள்ள வேண்டியது தான்'' என்று முடிவுபண்ணிக் கொண்டு... இந்த அம்மா மறுபடியும் பக்கத்து வீட்டு அம்மாவிடம் போனார். ''எவ்வளவு விலையானாலும் சரி.. நான் காசு கொடுதது வாங்கி வைத்துக் கொள்கிறேன். எந்தக் கடையிலே இது இருக்கிறது சொல்லுங்கள்!''என்று கேட்டார். ''இந்த மருந்துக்கு விலையே கிடையாது... இலவசமாகவே கிடைக்கும்'' என்றார் அவர்.

''அது எப்படி விலையில்லாமல் இதை விற்கமுடிகிறது?'' என்று கேட்டார் இவர். ''அது மருந்தாக இருந்தாற்தானே விலை வைக்கலாம். அது வெறும் 'தண்ணீர்தானே! என்றார் அவர். ''வெறும் தண்ணீரா சண்டையை நிறுத்துகிறது?'' என்றார் இவர். ''அது சண்டையை நிறுத்தவில்லை. உன்னுடைய மௌனம் தான் சண்டையை நிறுத்துகிறது. நீ வாயில் தண்ணீரை வைத்திருப்பதனால் எதிர்த்துப் பேசுவதில்லை. அதனாலே உன்கணவருடைய கோபம் சாந்தமாகி விடுகிறது'' என்றார் அவர்.

இந்தக் கதையிலிருந்து, சண்டையை நிறுத்த மருந்து எது என்று தெரிந்து கொண்டீர்களா? இதை நானும் தெரிந்து கொண்டு போத்தல்களில் தண்ணீரை ஊற்றி வைத்துக் கொண்டு, என்னிடம் வருகிறவர்களுக்குச் சிபார்சு பண்ணலாம் என்று நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஒரு அம்மா வந்தார். எனக்கும் என் வீட்டுக்காரருக்கும் அடிக்கடி சண்டைவருகிறது'' என்றார். ''கவலைப்படாதேயம்மா! நான் ஒரு மருந்து தருகிறேன்'' என்று சொல்லி ஒரு போத்தலை எடுத்துக்கொடுத்தேன். போத்தலில் இருப்பது என்ன என்பதைச் சொல்லிவிட்டால் அதன் மீது ஒரு மரியாதை வராது அல்லவா? அதனால் சொல்லவில்லை.

அந்த அம்மா வாங்கிக் கொண்டு போனார். நான்கு நாட்கள் கழித்துத்திரும்பி வந்தார். ''என்னம்மா... வீட்டில் சண்டை நின்று போயிற்றா?' என்று கேட்டேன். ''அங்கே நின்று போய்விட்டது... இப்போது உங்களிடம் ஆரம்பம்'' என்றார். ''பயந்து போய், என்னம்மா?'' என்றேன். ''பின்னே என்ன? நீங்கள் என்ன மருந்து கொடுத்தீர்கள்?'' என்று கோபமாகச் சொன்னார். '' அதுவெறும் தண்ணீர்தானே'' என்றேன். ''இது வெறும் தண்ணீரா?'' நன்றாகப் பாருங்கள் என்று அந்தப் போத்தலை நீட்டினார். நான் வாங்கிப் பார்த்தேன். அதன் பின்னர்தான் விஷயம் புரிந்தது! நான் கைதவறுதலாக எங்கள் வீட்டில் இருந்த மண்ணெண்ணெய்ப் போத்தலை எடுத்து அவரிடம் கொடுத்திருக்கின்றேன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பித்தோர் தொகை வீழ்ச்சி

## கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்

(கொழும்பு)

இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்கு அனுமதிகோரி விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில நடைபெற்ற நிகழ்வு ஒன்றில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கொடித்துவக்கு இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையினை முன்னைய ஆண்டுகளுடன ஒப்பிடுகையில் இவ்வாண்டு 30சத வீத்தால் குறைந்துள்ளது.

முன்பள்ளியில் இருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்கும் ஒரே ஒரு நாடு இலங்கையாக இருந்தும் பல்கலைக்கழக வலை அமைப்புக்குள் நிலவும் வன்முறை காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்பத் தயங்குகிறார்கள்.

இதன் காரணமாகப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் எழுத்தறிவு படைத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் தொழிநுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை குறைவாக வுள்ளது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு இலங்கையில் உயர் கல்வியை மேம்படுத்த அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டும் என்றார். (உ-10)

## காணாமல் போனோர் பற்றிய

# விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட குற்றப்புலனாய்வுப் பொலி ஸார் கீழ்வருவோரின் உறவினர்கள் மற்றும் பாதுகாவலர்களை விசார ணைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத் திற்கு அழைத்துள்ளனர்.

கந்தையா சிவதாசன்-புலியன் காடு, பிள்ளையார் கோயில் வீதி, ஆனைக்கோட்டை.

கார்த்திகேசு விஜயன்-செருகன் புலம், பண்டத்தரிப்பு.

கிட்ணர் வரதலிங்கம்-இல.24 கட்டுக்குலம் ஒழுங்கை, கொட்டடி.

எஸ்.ரொஷான்-இல. 46, கொழும்புத் துறை.

எம்.மதிகரன் -இல.15 பொன்னம் பலம் வீதி, அரியாலை.

மகாலிங்கம் ரவீந்திரன்-சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் மத்தி.

மகேந்திரன் ரவீந்திரன்-சோமசுந் தரம் வீதி, ஆனைக் கோட்டை.

மாரிமுத்து செல்வராஜ்-நவாலி கிழக்கு, மானிப்பாய்.

மரியதாஸ்அன்டன் மார்க்லஸ்-இல.23, புதிய பூங்கா வீதி, குருநகர்.

மார்க்கண்டு நாகேஸ்வரன்-கலா சாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு.

எஸ்.மோகன்-தச்சன் தோப்பு, நாவற்குழி, யாழ்ப்பாணம்.

என்.அருளம்பலம் இல.75, சோனகத்தெரு, யாழ்ப்பாணம்.

என்.இந்திரக்குமார் நவாலி வடக்கு, மானிப்பாய்.

என்.பத்மசேகர் தச்சன் தோப்பு நாவற்குழி.

என்.தங்கராஜா கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.

ந.விக்னேஸ்வரன் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பி.அருள் - 40 ஏ 21/5, வைமன் வீதி யாழ்ப்பாணம்.

பி.சதீஸ்வரன் கதிராகோவிலடி திருநெல்வேலி.

பரமணி சந்திரசேகர் இல.11/2, கொன்வென்றட் வீதி, யாழ்ப்பாணம்.

பியசேன வெலன்கேனி இல.18, ஏ.வி வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். (உ-3)

## இராசி பலன்

**22. 01. 2003**

**(தை 8, புதன்)**

| | |
|---|---|
| சதுர்த்தி | மு.ப 11.26வரை |
| பூரம் | பி.ப .1.10வரை |
| இராகுகாலம் | 12.35 - 2.05 |
| சுபநேரம் | 5.05 - 6.35 |

**சண்டேசுவரர் குருபூசை**

**மேடம்**
தாழ்ந்த சுபாவம், மனச்சஞ்சலம், காரிய இடையூறு, தொழில் நன்மை.

**இடபம்**
பயந்த சுபாவம், விரும்பாத உறவு, முயற்சி தாமதம், ரோக நிலை.

**மிதுனம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, குடும்ப நன்மை.

**கடகம்**
கௌரவக் குறைவு, வாக்குக் கலகம், தொழில் கஷ்டம், கற்பனை மிகுதி.

**சிங்கம்**
சயன சுகம், நல்ல முயற்சி, ஜனவசியம், போசன சுகம்.

**கன்னி**
மனக்குழப்பம், பிதா வழி உறவு, சுபசெலவு, முயற்சி தாமதம்.

**துலாம்**
மனமகிழ்ச்சி, தொழில் சிந்தை, பெருமையான சம்பவம், குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
பிறர் உதவி, சுப நிகழ்ச்சி, உற்சாகம், காரியம் கைகூடும்.

**தனுசு**
உடல் உழைப்பு, வீண் பயம், முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு.

**மகரம்**
பிரயாணபயம், உஷ்ண வியாதி, காரிய தடங்கல், போசன சுகம்.

**கும்பம்**
நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், விருந்துபசாரம், பொருள் சேர்க்கை.

**மீனம்**
சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், காரிய அனுகூலம், பயணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

## மைலோ உதைபந்தாட்டம்

# வெற்றி பெற்ற அணிகள் கொழும்பு செல்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட மைலோ உதைபந்தாட்டப் போட்டியில் முதல் இடம் பெற்ற 16வயதிற்குட்பட்ட யாழ். மத்திய கல்லூரி அணியும், இரண்டாம இடம்பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் தேசிய ரீதியிலான போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

யாழ். மாவட்ட மைலோ உதைபந்தாட்ட இணைப்பாளர் வ.செ.மகேந்திரம் பயிற்சியாளர் எஸ்எச்கே.மொகைதீன் ஆகியோர் போட்டியாளர்களைக் கொழும்புக்கு அழைத்துச் செல்லவுள்ளனர். (உ)

## வடக்கு - கிழக்கைச் சேர்ந்த

# 2452 சிறுவர்கள் பராமரிப்பு இல்லங்களில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் போர்ச்சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட 2ஆயிரத்து 452சிறுவர்கள், சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு வடக்குக்கிழக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என் ரஞ்சனி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சிவானந்த போதன சிறார்கள் பராமரிப்பு இல்லத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய பணிப்பாளர், இவர்களுக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களம் உதவிகள் வழங்கி வருகிறது.

இதற்கமைய கடந்த ஆண்டு வன்னிப்பிரதேசத்தில் 5காப்பகங்கள் திறக்கப்பட்டு அவற்றில் 750 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்
- குறள் -

# வலம்புரி

## மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக கழக மாணவர்கள் சிலர் ராக்கிங்கில் ஈடுபட்டதாக யாழ்.பிராந்தியப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து யாழ். பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடமாணவர்களும் பகிஷ்கரிப்புப போராட டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் நியாய பூர்வமான கோரிக்கையை முன் வைத்துள்ளனர். அதில் குறித்த பத்திரிகையில் வெளிவந்த ராக்கிங் செய்தி குறித்து பல்கலைக் கழக நிர்வாகம் விசாரணைகளை மேற்கொண்டு அச் செய்தி உணமையாயின் உரியவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இல்லையேல் ராக்கிங் தொடர்பாக வெளியான செய்தி பொய்யாயின் அதனைப் பிரசுரித்த பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மாணவர்களின் கோரிக்கை. யாழ்.பல்கலைக் கழக வரலாற்றில் இத்தகைய தொரு நியாய பூர்வமான- கருத்தை முன்வைத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்துவது இதுவே முதற் தடவையாகும்.

யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த காலங் களில் இடம்பெற்ற ராக்கிங்கோடு ஒப்பிடும் போது தற்போது அதன் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

அதற்காக ஒரு சில ராக்கிங் நடக்கலாம் என்பதுமில்லை. ராக்கிங்கை ஒழிப்பதில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமும், மாணவர் ஒன்றியமும் தமது காத்திரமான பங் களிப்பை செய்து வருகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

அதே நேரம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ராக்கிங் தொடர்பாக வெளியிட்ட செய்தியிலும் உண்மையில்லை என்ற முடிவுக்கும் வர முடியாது. ஏனெனில் யாழ்.பல்கலைக் கழகம் என்பது யாழ்ப்பாணததின கலாசார விழுமியத்தின் தூண் அங்கு என்ன பிரச்சினைகள் ஏற்பட்டாலும அது தனியே பல்கலைக் கழகத்தை மட்டும் தாக் காது. மாறாக தமிழினத் தின் கலாசாரத்தையே அது பாதித்து விடும். இதனை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பொறுப்புள்ள எந்தப் பத்திரிகையுமே மறந்து விடமுடியாது

அவ்வகையில், யாழ். பிராந்தியப் பத்திரிகையொன்றில் வெளிவந்த ராக்கிங் தொடர்பான செய்தி குறித்து வெறுமனே பேசாமல் விட முடியாது. குறித்த செய்தியில் உள்ள உண்மைத் தன்மையை அறியும் பொறுப்பு தமிழ் மண்ணை நேசிக்கும் ஒவ்வெரு பிரஜைக்குமுண்டு.

அவ்வகையில் பல்கலைக் கழக நிர்வாகம், மாணவர் ஒன்றியம், குறித்த பத்திரிகை நிர்வாகம் என்பன இணைந்து செயற்படுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

# இந்துமத நிறுவனங்கள் சேவை செய்யப் பின்னடிப்பதே மதமாற்றத்திற்கு காரணம்

## அமெரிக்க இந்துத் துறவி எடுத்துரைப்பு



(தென்மராட்சி)

இன்று பல ஆலயங்கள், தேவஸ்தானங்கள் இலட்சக்கணக் கான பணத்தைச் செலவு, செய்து கட்டங்களைக் கட்டுவதிலும், கும்பாபிஷேகங்கள் செய்வதிலுமே கரிசனையாக உள்ளன. ஆனால் சேவை செய்வதில் எவ்வித அக்கறையும் காட்டமாட்டார்கள். அதனால் தான் எம்மத்தியில் மதமாற்றம் கூடுதலாக இடம்பெற்றுவருகின்றது.

அமெரிக்க இந்துதுறவியான சுவாமி தந்திரதேவா யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்லப் புகுவிழாவில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விழாவில் சுவாமி தந்திரதேவா தொடர்ந்து உரையாற்றும் போது,

எம்மதமும் சம்மதம் எல்லாமதங்களும் ஒன்று. மதங்களில் வித்தியாசமில்லை. முஸ்லிம்கள் மத்தியில் மதமாற்றம் இல்லை. எம்மத்தியில் மதப்பற்று வெகுவாகக் குறைந்து போயுள்ளது. கும்பாபிஷேகம் செய்வதும். மணி அடிப்பதும், கட்டடம் கட்டுவதும் தான் மதவழிபாடு என்று தப்பான எண்ணம் எம்மவர்களின் மதப்பற்றினைப் பாழாக்கியுள்ளது. எமது மதம் மூலம் நாம் சேவையினைச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

யாழ் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தனது உரையில்,

நாம் வீணான படாடொபங்களில் பணத்தைச் செலவழிக்கின்றோமேயொழிய, சகஉயிர்களை மனிதர்களாக மதித்து அவர்களுடைய தேவை தான் உண்மையான ஆத்ம ஈடேற்றத்திற்கு வழி வகுக்கும் என்ற உணர்வுடன் செயற்படத்தவறியுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் பல நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் கைதடிசைவச் சிறுவர் இல்லமும், திருநெல்வேலி முத்துத்தம்பி இல்லமும் தான் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாம் எத்தனையோவற்றை இழிந்து விட்டோம். இந்தநிலையில் நாம் ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்வுக்கு கைகொடுத்து உதவவேண்டும் என்றார்.

திருநெல்வேலி முத்துத்தம்பி சைவச் சிறுவர் இல்லப்பணிப்பாளரான திருமதி. மனோண்மணி சண்முகதாஸ் அங்கு உரைநிகழ்த்தும் போது,

இங்கு வாழ்கின்ற குழந்தைகள் தெய்வக் குழந்தைகள் மனிதக் குழந்தைகள் அல்ல. இங்கு வாழ்கின்ற குழந்தைகளை அனாதைகள், ஆதரவற்றவர்கள் என்று அழைக்கக்கூடாது. பட்டமும், பதவியும் தராத ஒரு பயிற்சி நெறியை இந்தக் குழந்தைகள் எமக்கு வழங்குகின்றார்கள்.

ஒரு வீட்டில் ஒத்துப்போக முடியாத வாழ்க்கை வாழ்கின்ற எங்களுக்கு இந்தக் குழந்தைகள் ஒரு உண்மையைச் சொல்லித்தருகிறார்கள். நாங்கள் கூடிவாழ்கின்ற போது சந்தோசமாக இருக்கிறோம். அத்தகைய ஒரு வாழ்க்கையை ஏன் உங்களால் வாழ முடியாது என்று நாளாந்தம் கேட்டுக் கொள்கின்றார்கள்.

உணவைப்பகிர்ந்து உண்பது, கடமைகளைச் சேர்ந்து செய்வதும் கல்வியைக் கூட்டாகக் கற்பதும் அவர்கள் எங்களுக்குக் கற்றுத்தருகின்ற பாடம் என்றார்.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமச்சாரிய சுவாமிகள் அங்கு ஆசியுரை வழங்கும் போது,

தருமம் செய்யவேண்டும் என்ற எண்ணம் எம்மவர்கள் மத்தியில் உருவாகிவருகின்றது. இங்குள்ள சிறுவர்களை சைவச் சூழ்நிலையில் வாழச்செய்ய வேண்டும். அவர்கள் சமய சூழ்நிலையில் வாழவேண்டும், நாளைய சமுதாயம் நல்ல படியாக வாழ வேண்டும். இன்று எம்மவர்கள் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவர்களாக உள்ளார்கள். ஆனால் எவ்வித செயல்வடிவமும் இல்லை. சிறுவர்கள் யாருமற்றவர்கள் என்ற நிலைப்பாட்டினை மாற்றி யாரும் உள்ளவர்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்றார்.

இவ்விழாவில் கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும், அஷ்டலச்சுமி பதிப்பக உரிமையாளரான குலபதி ஆறுமுகம் கந்தையா இல்லத்திற்கு ஒரு லட்சம் ரூபா நிதியை தனது அன்பளிப்பாக வழங்கினார். அவரது முன்னுதாரனத்தைப் பாராட்டி இந்துசமயப் பேரவை அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. (உ-77)

# வவு. தெற்கு தமிழ்ப் பிரதேசங்களில் 1658 குடும்பங்கள் மீளக்குடியமரும்

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் உடனடியாக மீளக் குடியமர்த்தப்படவுள்ளர்.

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் இப்பிரதேசங்களை விட்டுவெளியேறின.

தற்போது நடைபெற்று வரும் சமாதான .நடவடிக்கைகளை அடுத்து, இப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்த இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அண்மையில் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இச்சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய வவுனியா தெற்கு பிரதேசத்தில் 629 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 375 பேர் வவுனியா உயர் பாதுகாப்பு வலயப்பகுதியிலும்,

800 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 218 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைப்பகுதியிலும்,

பாலமோட்டை பிரதேசத்தில் 229 குடும்பங்களும், ஏனைய இடங்களில் 298 குடும்பங்களும் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக வவுனியா பிரதேசச் செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேச மக்களை மீளக் குடியமர்த்தும் வகையில் புதைக் கப்படடுள்ள நிலக்கன்னி வெடிகளை அகற்றும் பணிகள் துரித மாகப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (உ-8)

# தாய். இல். புலிகள் அலுவலகம் அமைக்க அனுமதி மறுப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் தமது அலுவலகம் ஒன்றை திறக்க அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்திருப்பதாக கூறப்படுகிறது.

மேற்படி கோரிக்கையை விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயூடாக விடுத்த போதிலும், இதற்கு அனுமதி வழங்க தாய்லாந்து அரசு மறுத்து விட்டதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு வட்டா ரங்கள் உறுதி செய்துள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கமானது இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் தடைசெய்யப் பட்ட காரணத்தினால் அந்நாடு களில் இருந்த அலுவலகங்களில் மூடப்பட்டன.

இங்கிலாந்தில் இயங்கி வந்த புலிகளின் சர்வதேச தொடர்புகான அலுவலகமும் அந்த அடிப்படையில் மூடப்பட்டது.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாங்கொக்கில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் திறப்பது தொடர்பில் ஆராய முடியாமல் இருக்கிறது என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

# பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது.

(தென்மராட்சி)

யாழ். பல்கலைக்கழக புதிய கல்வியாண்டு மாணவிகள் குறித்த அவதுறான செய்தி வெளியாகியமைக்கு ஆட்சேபம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழ அனைத்துபீட மாணவர்களும் நேற்று இரண்டாவது நாளாகவும் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழ நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர். (உ)

# தினசரி தியானம்

## உன் தவறுகளை மறைக்கக் காரணம் தேடாதே

உன்னையே சீர் தூக்கிப்பார் உன்னுள்ளேபார். குறைகளை நீக்க முயற்சி செய். இதுதான் உண்மையான சாதனையாகும். உன்குற்றங்களை எல்லாம் நீக்க வேண்டும் பல நெடுநாளைய பழக்கவழக்கங்கைளை வேருடன் களையவேண்டும். உன்தவறைமறைக்கக் காரணம் தேடுவதையும், நீ செய்ததே சரி என்று நிலைநாட்ட முயல்வதையும் விட்டுவிடு.

ஜபம், கீர்த்தனம், தியானம், இராமாயணம், கீதை வாசித்தல் இவற்றில் ஒழுங்காக இரு. நீ மேலான ஆனந்தம் அடைவாய். தவறு எதுவும் நேராது.

சுவாமி சிவானந்தர்

# பொது இணக்கப்பாடு விடுதலைப் புலிகளுடன் பேச தடையாகாது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இன்ப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டுமானால் புலிகள் இயக்கம் விட்டுக் கொடுப்புடன் செயலாற்ற முன்வர வேண்டும்.

சகல இன மக்களும் நாட்டின் சகல இடங்களிலும் வாழ உரித்துடையவர்கள்.

மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அனுர திசாநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் பொது இணக்கப்பாடு ஏற்பட்டாலும் கூட அந்த இணக்கப்பாடு புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தடையாக இருக்காது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து .செயல்படுவது குறித்த திட்டம் ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் நாம் கடந்த காலத்தில் செய்துகொண்ட நன்நடத்தை உடன்படிக்கையிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தடைசெய்யவில்லை என மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# தமிழ்ப் பொலிஸாரை நியமிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மலையக பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாத குறைபாட்டை நிவிர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையகப் பிரதேசங்களில் சிங்களப் பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனால், இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ - 8)

### இரவோடு......

உட்பட பல்வேறு தடைகளை தாண்ட வேண்டியுள்ளதாகவும், இதனாலேயே அகதி முகாம்களில் இருந்து இரவு நேரங்களில் வெளியேறி, மீன்பிடிப்படகுகளின் மூலம் இலங்கைக்கு வர இவர்கள் முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தாயகம் திரும்பும் நோக்கில் அகதி முகாம்களில் இருந்து இரவு நேரங்களில் வெளியேறிய ஈழத்தமிழ் அகதிகள் சிலரை தாம் இனங்கண்டுள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

### வன்னி...

இன்று சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதேவேளைஉலக வங்கிக் குழுவினர் நாளை வியாழக் கிழமை முலலைதீவுக்கும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கும் விஜயம் செய்து அங்குள்ள கல்விப்பணிப்பாளர்களையும், உயர்அதிகாரிகளையும் சந்தித்து கலைந்துரையாடவுள்ளனர். இன்று வவுனியா வரும் உலகவங்கிக் குழுவில் விடுதலைப் புலிகளின் தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேச பொறுப்பாளர் ஜோய் மகேஸ்வரன், "சிரான்" அலுவலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

24ம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ள இவ்வுலகவங்கிக் குழுவினர், விடுதலைப்புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனையும் சந்திக்கவுள்ளனர். (வ)

### ஜனாதிபதியுடன்....

காப்பு வலயம் தொடர்பாக அரசாங்கம் எத்தகைய முடிவை வெளிப்படுத்தவுள்ளது என்ற திட்டம் ஆகியன குறித்து ஜனாதிபதியுடன் விரிவாகக் கலந்துரையாடிய பிரதமர் விக்கிரமசிங்க,பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பாக அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களையும் இடம்பெறச்செய்ய வேண்டுமென்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை சமாதான முயற்சியில் காணப்படுகின்ற குறைபாடுகளை ஜனாதிபதி இச்சந்திப்பின் போது பிரதமருக்கு சுட்டிக் காட்டியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (இ)

### மீள் குடியமர்வு...

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், கே.அருந்தவபாலன்- தென்மராட்சி மக்கள் நலன் காப்பகம்;

அ.நீலகண்டன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்; கலாநிதி ஏ.எவ்.- ஏக்ஸ்.ஜெயசேகரம்- பங்குத்தந்தை குருநகர். (வ)

### ஆதீன முதல்வர்.....

நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஆதீன விடயங்கள் மற்றும் இந்து சமயம் எதிர் நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. (த)

### தமிழ்ச்செல்வனுடன்...

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவகப் பணியகத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளனின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை டெனிஸ் அகதிகள் பேரவையின் ஆசிய, ஆபிரிக்க தலைமைச் செயலக பிரதிநிதி நெல்ஸ் பெண்டர்ஸ்சன், பேரவையின் இலங்கைக்கான பிரதிநிதி வீக்கிற்ரே எவிசன் ஆகியோர் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்(ம)

### அமைச்சர்...

போன்ற விடயங்களை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியபோது இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் தனக்குள்ள ஆர்வத்தை அவர் என்னிடம் வெளிப்படுத்தியதோடு இனப்பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் ஒரு சந்திப்புக்கும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

**சமாதானத்தில் ஜனாதிபதியின் ஆர்வம்**

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயறசியைத் தானே தொடர்வதற்குத் சில விட்டுக கொடுப்புக்களுக்குக் கூடத்தான் தயாராகயிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பாக கலைந்துரையாடல்களை நடாத்த தயாராக இருப்பதாக சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும் என்பதில் தான் நிதானமாகவும உறுதியாகவும் இருப்பதாகவும் அவர் என்னிடம் தெரிவித்துள்ளார.

**கடந்த காலத்தில் பொ. ஜ.ஐ.முன்னணிக்கு நல்ல தமிழர் கிடைக்கவில்லை**

பொது ஜன ஐக்கிய முன்னணியின் கடந்த கால ஆட்சியின் போது ஆட்சிக்கு உறுதுணையாக இருப்பதற்கு நல்ல தமிழர்கள் தனக்கு அகப்படவில்லை என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதில் இருந்து ஈ.பி.டி.பி அமைப்பினரையே அவர் குற்றம் சாட்டியுள்ளார் என்பதை உணர முடிந்தது.

1999ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியில் நான் இணைந்த போது ஜனாதிபதி சந்திரிகா மீது தமிழ்மக்களுக்கு இருந்த காழ்ப்புணர்ச்சி போன்றே பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசியக்கட்சி மீதும் இருந்தது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் நான் இணைந்த பின் கட்சியில் உள்ள அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே ஓரளவு புரிந்துணர்வு நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சியினைக் கொண்டு வந்தேன்.

இதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் அவர்களுடன் இணைந்து பழக ஆரம்பித்துள்ளேன்.ஜனாதிபதி சந்திரிகாவுடனும்இத்தகைய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளேன்.

**எனது எதிர் கால நடவடிக்கைகள்**

இந்நிலையில் எனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் நெருக்கமான அரசியல் தொடர்பைக் கொள்ளவுள்ளேன் ஐக்கிய தேசிய கட்சியூடாக பாராளுமன்றம்சென்ற ஒரு பிரதிநிதியாகவே இருந்து வருகின்றேன். ஆனால் கட்சியை யாழ்ப்பாணத்தில் வளர்க்கவோ நிலைநிறுத்தவோ நான் எதுவும் செய்யவில்லை. கட்சியை வளர்க்கும் எந்த விதமான நடவடிக்கையிலும் நான் ஈடுபடவில்லை.

**அரசை எதிர்க்க தயாராகிறேன்**

என்னைப்பொறுத்த வரையில் எனது தமிழ் இனத்தின் அரசியல் வளர்ச்சியிலேயே எனது கவனமுள்ளது எதிர்வரும் 27ம் திகதி பாராளுமன்றம் கூடும் போது அரசை எதிர்த்து விமர்சிப்பதற்கு நான் தயாராகி வருகின்றேன்.

இன்றைய சூழ்நிலை தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் அரசை ஆதரித்து வருகின்றன.நானும் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து அரசை ஆதரித்து வருகின்றேன். இந் நிலையில் தமிழ்மக்களின் குறைகளை எடுத்துக்கூற பாராளுமன்றத்தில் ஒருவரும் இல்லை.

இதனால் நான் அரசில் இருந்தவாறே எதிர்கட்சியினருடன் இணைந்து செயற்பட தயாராகி வருகிறேன் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் தனது பேட்டியின் போது வலியுறுத்திக் கூறியுள்ளார். (ம)

## நேபாள இளவரசிக்கு இன்று திருமணம்

(காத்மண்டு)

நேபாள மன்னர் கனேந்திராவின் ஏக புதல்வியான இளவரசி பிறேமினாவுக்கு இன்று திருமணம் நடைபெறவுள்ளது.

கலிபோனியா பல்கலைக்கழக கணனிப்பட்டதாரியான லாஜ் பகதூா சிங் என்பவரையே பிறேமினா திருமணம் செய்து கொள்ளவுள்ளார.

திருமண நிகழ்வையொட்டி நேபாள அரனர்மனை விழாக் கோலம் பூண்டுள்ளதுடன். 2001ம் ஆண்டு நேபாள அரச பரம்பரை கூண்டோடு அழிக்கப்பட்ட சோகத்திலிருந்து மீள முடியாது தவிக்கும் மக்களுக்கு இத் திருமண வைபவம் சற்று ஆறுதலைத்தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(த)

## ட்ரக்டர் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை தமது தேவைகளுக்கு இரண்டு பெரிய ட்ரக்டர்களையும் அதற்குரிய இரண்டு பெட்டிகளையும் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்குரிய வழங்கல் கட்டளை அனுப்பப்பட்டுள்ளதாகவும்.அடுத்த வாரமளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ட்ரக்டர்கள் எடுத்துவரப்படும் என்றும் யாழ் மேயர் எஸ்.கந்தையன் தெரிவித்துள்ளார். (இ)

RAMCO CEMENT

ராம்கோ சிமெந்து

இலங்கையில் மட்டுமா? இல்லை!

இந்தியாவில் மட்டுமா? இல்லவே இல்லை!!

S.L.S107 அங்கீகாரம் பெற்றது
I.S.O.9002 தரம் பெற்றது
B.S.S.12-1991தரத்திற்கு அமைவானது

ஆசியாவின் முதலாம் தர (நம்பர்-1) தொழிற்சாலையாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்..

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமையடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்:

ஈஸ்வர பகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 2222350 (C/5643)

# விளையாட்டுச் செய்தி

**வி.பி கிண்ண கிரிக்கெற் தொடர்**

## இலங்கையை 9 விக்கெற்றால் அவுஸ்ரேலிய அணி வென்றது

(மெல்பேன்)

வி.பி. கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று அவுஸ்ரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான போட்டியில் அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியைச் சேர்ந்த மாவன் அத்தபத்து முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மாவன்அத்தபத்தும் அபிஷேக் குணவர்த்தனவும் களமிறங்கினர். இணையாட்டமாக இவர்கள் 64 ஓட்டங்களைப் பெற்றனர்.

மாவன்அத்தபத்து 26 ஓட்டங்களையும் அபிஷேக் குணவர்த்தன 45 ஓட்டங்களையும். குமார்சங்கக்கார 43 ஓட்டங் களையும் அரவிந்த டி சில்வா 44 ஓட்டங்களையும் பெற்றனர்.இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 34.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங், மற்றும் மற்யூகெடன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 106, 80 ஓட்டங்களை பெற்றனர்.

இவ்வேளை இப்போட்டியில் இலங்கை அணித்தலைவர் சனத் ஜெயசூரிய சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஆகியோர் பங்குபற்றவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கிரிக்கெட் ஆட்டத்தில் 9 ஆயிரம் ஓட்டங்களை குவித்து அரவிந்த டி சில்வா சாதனை

(மெல்போன்)

கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி ஒன்பதாயிரம் ஓட்டங்களை குவித்து உலகின் மூன்றாவது துடுப் பாட்ட வீரர் என்ற பெருமையை இலங்கை கிரிக்கெட் அணியின் சிறந்த துடுப்பதாட்டவீரர் அரவிந்த டி சில்வா தனதாக்கிக் கொண்டு ள்ளார்.

மெல்போனில் நேற்று அவுஸ்ரேலியாவுக்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற வி.பி. கிண்ண தொடரில் 44 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இப்பெருமையை அவர் பெற்றுள்ளார்.

37 வயதுடைய இவர் 298 போட்டிகளில் விளையாடி ஒன்பதாயிரம் ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரன் சச்சின் டெண்டுல்கர் முதலாமிடத்திலும். இந்திய அணியின் முன்னாள் தலைவர் முகமட் அசாருதீன் இரண்டாம் இடத்திலும் உள்ளனர். (இ-5)

ஓட்டங்களை குவித்தோர் முதன்நிலை வரிசையில்

| | வீரர்களின் பெயர் | விளையாடிய போட்டிகள் | ஓட்டங்கள் | நாடு |
|---|---|---|---|---|
| 1 | சச்சின்டெண்டுல்கர் | 303 | 11546 | இந்தியா |
| 2 | மொகமட் அசாருதீன் | 334 | 9378 | இந்தியா |
| 3 | அரவிந்த டி சில்வா | 298 | 9000 | இலங்கை |

## பாராளுமன்றக்குழு இத்தாலிக்குச் சென்றது

(ரோம்)

இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவது பற்றி ஆராய்வதற்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பாராளுமன்றக்குழுவினர் நேற்று இத்தாலிக்கு சென்று அந் நாட்டு அரசியல் அமைப்பு குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இத்தாலி பாராளுமன்றக் குழுத்தலைவர் டாக்டர் லூயிஸைச சந்தித்து சமஷ்டி முறை குறித்து அவர்கள் விரிவாக ஆராய்ந்தனர் இத்தாலியின் தென்மாகாணத்தில் பல்லின மக்கள் வாழ்கின்றனர் அந்த மாகாணத்தில் நிலவும் ஆட்சி முறை குறித்தும் அங்கு விரிவாக ஆராயப்பட்டது அதேவேளை இன்று தென்மாகாண மக்களுடன் பாராளு மன்றக குழுவினர் கலந்துரையாடவுள்ளதுடன் ஆட்சி முறையில்உள்ள விருப்பு, வெறுப்புக்களை மக்களிடமிருந்து கேட்டறியவுள்ளனர்.

சமஷ்டி முறைபற்றி ஆராயச் சென்றிருக்கும் இலங்கைப் பாராளுமன்றக் குழுவினர் பெல்ஜியத்திற்குச் சென்று அங்குள்ள ஆட்சிமுறைபற்றி ஆராய்ந்த பின்னர் இத்தாலிக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## அமைச்சர் சமரசிங்க தெரிவானார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் சர்வ பாராளுமன்றத் தலைவராக அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஏகமன்தாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த சங்கத்தின் நூறாவது கூட்டத்தொடர் நேற்று முன் தினம் ஜெனீவாவில் நடை பெற்ற போது 150 நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் சமரசிங்காவை ஏகமனதாக தெரிவு செய்தனர். ஆசிய நாட்டவர் ஒருவர் இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். (ந-5)

## நியமனக் கடிதம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியர்களில் உள்ளகப்பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியோருக்கு நியமனக் கடிதங்கள் நேற்று யாழ் மாநக ரசபை அலுவலகத்தில் வைத்து முதல்வர் எஸ்.கந்தையனால் வழங்கப்பட்டது. (இ)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.